Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MAY 01, 2024

புதன்கிழமை மே 01, 2024 | ஒளி: 09 கதிர் 242 | பக்கம்:08 | நகரப்பதிப்பு

# ட்ரோன் தடை



மே தினக் கொண்டாட்டங்களை அனுமதியின்றி காணொளி பதிவு செய்வதற்கு ட்ரோன்களை பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



# மே.1 சர்வதேச தொழிலாளர் தினம்



## மேதின கூட்டங்களின் விபரம்

தொழிலாளர் தினமான இன்று (மே.1) தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளால் மேதின ஊர்வலங்களும் கூட்டங்களும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நாடளாவிய ரீதியில் 40 கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன. கொழும்பில் மட்டும் 14 கூட்டங்களும் பேரணிகளும் நடத்தப்படவுள்ளன. அவற்றின் விபரம்,

### ஐ.தே.க

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியின் மேதின கூட்டம், கொழும்பு மாளிகாவத்தையில் இடம்பெறும்.

### ஐ.ம.ச.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் மேதின கூட்டம், கொழும்பு-சிற்றம்பலம் வீதியில் நடத்தப்படும்.

### தே.ம.ச.

தேசிய மக்கள் சக்தியின் மேதினக்கூட்டங்கள் அதன் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க எம்.பி. தலைமையில், கொழும்பு-கன்னங்கர மாவத்தை, மாத்தறை, அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும்.

### சு.க.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டம், கம்பஹாவில் நடத்தப்படும்.

### ஸ்ரீ.பொ.ஜ.பெ.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மேதின கூட்டம், கொழும்பு-கெம்பல் மைதானத்தில் நடத்தப்படும்.

### இ.தொ.கா.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், கொட்டக்கலை நகர மைதானத்தில் நடத்தவுள்ளது. இதில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதம அதிதியாக கலந்துகொள்வார்.

### ம.ம.மு.

மலையக மக்கள் முன்னணியின் மேதின கூட்டம். அதன் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தலைமையில், ஹட்டனில் நடத்தப்படவுள்ளது.

### ஈ.பி.டி.பி.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்த தலைமையில், பருத்தித்துறையில் மேதின கூட்டத்தை நடத்த உள்ளது என கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

### தொ.தே.ச.

தொழிளாளர் தேசிய சங்கத்தின் மேதின கூட்டம் தலவாக்கலை நகர சபை மைதானத்தில் தலைவர் திகாம்பரம் தலைமையில் நடைபெறும்.

இதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பங்கேற்க உள்ளார்.

### பு.ஜ.மா.லெ.க.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி, யாழ்ப்பாணம், வின்மல், வவுனியா நகரசபை, மாத்தளை நகரசபை மண்டபங்களில் நடத்தவுள்ளதாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் வெத்திலிங்கம் மகேந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு

# இடைக்கால தடை



உயர் நீதிமன்ற பிரதம நீதியரசரை தவிர மற்ற நீதியரசர்களைகுடியரசுத் தலைவர் நியமிக்க தடை விதித்து உயர் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை(30) இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவு ஒக்டோபர் 4ஆம் திகதி வரை அமலில் இருக்கும்.

சட்டத்தரணியால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை ஏற்று உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தற்போதைய தலைவர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்னவை உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிப்பதற்கான ஜனாதிபதியின் பரிந்துரையை அரசியலமைப்புச் சபை அங்கீகரிக்குமாறு உத்தரவிடுமாறு கோரி மனுதாரரான சட்டத்தரணி சரித் மஹீபுத்ர பத்திரத்ன இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ரத்துபஸ்வல தீர்ப்பு ஒத்திவைப்பு



சுத்தமான குடிநீருக்காக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ரத்துபஸ்வல பிரதேசவாசிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி 3 பேர் கொல்லப்பட்டதுடன், 45 பேர் காயமடைந்த சம்பவம் தொடர்பிலான தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில், குற்றம் சுமத்தப்பட்ட இராணுவ பிரிகேடியர் உள்ளிட்ட மூவருக்கு எதிரான தீர்ப்பை எதிர்வரும் 17 ஆம் திகதி அறிவிக்க கம்பஹா விசேட மூவரடங்கிய மேல் நீதிமன்ற அமர்வு செவ்வாய்க்கிழமை (30) தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2



## 6,000 பொலிஸார் உஷார்

மே தினத்தை முன்னிட்டு, இடம்பெறவுள்ள பேரணி மற்றும் நிகழ்வுகள் காரணமாக, கொழும்பு நகரில் விசேட போக்குவரத்து திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## "கோட்டாபயவை நியமித்ததை கடுமையாக நான் எதிர்த்தேன்"



நாடு இன்று எதிர்நோக்கும் நெருக்கடியிலிருந்து அனுபவம் வாய்ந்த முதிர்ந்த தலைவரால் மட்டுமே மீட்டெடுக்க முடியும் என்பதால், அனுபவமற்ற புதியவர்களிடம் நாட்டை ஒப்படைக்க நினைக்கவேண்டாம் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



## தொழுநோயாளர்கள் நால்வர் சிக்கினர்

வி.ரி.சகாதேவராஜா

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் வெட்டு வாய்க்கால் பகுதியில் தொழுநோய் கள ஆய்வு செவ்வாய்க்கிழமை (30) நடத்தப்பட்டது.

தொடர்ச்சி P2



## தேசிக்காய் விலை எகிறியது

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு கிடைத்த மரக்கறிகளின் மொத்த விலை வீழ்ச்சியடைந்த போதிலும், தேசிக்காய் மற்றும் பச்சை இஞ்சியின் மொத்த விலை வேகமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2



## 4 நாட்களுக்கு மதுபான பூட்டு

உலக தொழிலாளர் தினமான மே 01 மதுபானசாலைகள் சில மூடப்படவுள்ளதாகக் கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

மே தின பேரணிகள் இடம்பெறும் பிரதேச செயலகப் பிரிவுகளில் இயங்கும் அனைத்து உரிமம் பெற்ற சில்லறை மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்படும். ஏனைய இடங்களில் இயங்கும் மதுபானசாலைகள் மூடப்படாது. வழமை போலவே திறந்திருக்கும்.

தொடர்ச்சி P2



## "பிக்கு அபகரித்த காணியை மீட்கவும்"

### விவசாயிகள் கோரிக்கை: 88 ஏக்கரில் சிறுபோகம் செய்வதாக விசனம்

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை, குச்சவெளி- திரியாய் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட ஆத்திக்காட்டுவெளி பகுதியில் உள்ள தமிழ் மக்களின் பாரம்பரிய விவசாயக் காணிகளில் பௌத்த பிக்கு ஒருவர் விவசாயம் மேற்கொண்டு வருவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை தமது வாழ்வாதாரத்திற்காக மீட்டுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தொடர்ச்சி P2



## "சமிக்ஞைகளில் பணம் கொடுக்காதீர்"

பிரதான வீதியில் உள்ள போக்குவரத்து சமிக்ஞைகள் மற்றும் பாதசாரி கடவைகளுக்கு அண்மையில் யாசகம் கேட்போருக்குப் பணம் கொடுக்க வேண்டாம் என பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மின்னல் தாக்கத்தில் அண்ணா, தங்கை பலி

மாத்தளை- இரத்தோட்டை, தங்கந்த வெல்கலய பகுதியில் உள்ள வீடொன்றில் மின்னல் தாக்கியதில் 12 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவரும் 23 வயதுடைய இளைஞனும் உயிரிழந்துள்ளதாக இரத்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ரத்துபஸ்வல தீர்ப்பு...

குறித்த வழக்கு செவ்வாய்க்கிழமை(30) எடுத்துக்கொள்ளப்பட்டவேளை, வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 17ஆம் திகதி அறிவிக்கப்படுமென கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி சஹான் மாபா பண்டார அறிவித்தார்.

இதன்படி, குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவ பிரிகேடியர் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த மூன்று இராணுவத்தினரையும் அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிபதி கட்டளையிட்டார்.

தங்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கும்படிக்கோரி, வெலிவேரிய ரத்துபஸ்வல கிராமத்தைச் சேர்ந்த மக்கள் வீதியில் இறங்கி, 2013ஆம் ஆண்டு ஒகஸ்ட் முதலாம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தினர். அந்த ஆர்ப்பாட்டத்தின் மீதே, பாதுகாப்பு தரப்பினரால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

## 6,000 பொலிஸார் உஷார்

அத்துடன், பாதுகாப்பு பணிகளில் 6,000 பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தொழுநோயாளர்கள் நால்வர் சிக்கினர்

காரைதீவு சுகாதார உணவு அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தலைமையிலான சுகாதார குழுவினர் அப்பகுதியில் வீடு வீடாக விஜயம் செய்து ஆய்வு செய்தனர். இதில், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், தொழுநோய் கட்டுப்பாட்டுக் கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது ஏலவே இனங்காணப்பட்ட நான்கு தொழுநோயாளர்களுக்கு உரிய சிகிச்சை வழங்குவதற்கான நடவடிக்கையும் ஆலோசனையும் மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் உரிய சிகிச்சை பெறாமல் இருந்து வந்தமை அவதானிக்கப்பட்டது.

## தேசிக்காய் விலை எகிறியது

இதன்படி, ஒரு கிலோ கிராம் தேசிக்காய் 1,000 ரூபாய் முதல் 1,200 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவதாக அங்குள்ள வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், ஒரு கிலோ கிராம் பச்சை இஞ்சி தற்போது 3,000 ரூபாய் முதல் 3,200 ரூபாய் வரை அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும், தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு அதிகளவு மரக்கறிகள் கையிருப்பில் உள்ள போதிலும் நுகர்வோர் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கு அங்கு வராத நிலை காணப்படுவதாகப் பொருளாதார நிலையத்தின் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

# இடைக்கால தடை

பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நிமல் சிறிபால டி சில்வா, சாகர காரியவசம் உள்ளிட்ட அரசியலமைப்புச் சபை உறுப்பினர்களைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிடும் வகையில் மனுதாரர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

உயர் நீதிமன்ற மூன்று நீதியரசர்களான எஸ்.துரைராஜா, ஏ.எச்.எம்.டி.நவாஸ் மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் தலைமையிலான அமர்வில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் சார்பில் சஞ்சீவ களுஆராச்சியின் அறிவுறுத்தலின் பேரில் சட்டத்தரணி சஹீதா பாரி, மெஹ்ரான் கரீம், நவீன் மஹா ஆராச்சிகே மற்றும் அமில பெரேரா ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா ஆகியோரும் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

# “கோட்டாபயவை நியமித்ததை கடுமையாக நான் எதிர்த்தேன்”

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னிறுத்துவதற்குக் கட்சி தயாராக இருந்த போது, அதற்கு அவர் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், அதனை மொட்டுக் கட்சி கேட்கவில்லை என ரணதுங்க சுட்டிக்காட்டினார்.

ரணிலை ஜனாதிபதியாக்கியது மொட்டுக் கட்சியின் தலைவர்களே அன்றி தானும் மொட்டுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அல்ல என சுட்டிக்காட்டிய அமைச்சர், அதற்கு தானும் மொட்டுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவளித்தோம் என்றார்.

தாம் ரணிலின் தேவைக்காகக் கடைக்குப் போகவில்லை என்றும், இந்த நாட்டு மக்களுக்காகத் தான் கடைக்குப் போவதாகவும் அமைச்சர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

உடுகம்பல பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை (30) இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து விளக்கமளிக்கும் வகையில் இந்த சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

“71 இடதுசாரி அரசியல் கட்சியான திருமதி சிறிமாவோ அரசாங்கத்தைப் பெற்ற பிறகு, மக்கள் விடுதலை முன்னணி கலவரங்கள் செய்து அன்றைய அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்றது. அன்று அவர்கள் ஜே.ஆர்.ஜெயவர்தனவுடன் சேர்ந்து கொண்டார்கள். சேர்ந்து ஜெயவர்த்தனவின் அரசாங்கத்தை முன்னுக்குக் கொண்டுவர உழைத்தார்கள். ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் இந்திய இராணுவம் கொண்டுவரப்பட்டபோது ஜே.ஆரை எதிர்த்து அதைச் சுதந்திரப் பிரச்சினையாக்கி பிரேமதாசவை வெற்றிபெற உதவினார்கள். பிரேமதாசவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். பின்னர். 88/89 தேர்தல் நேரத்தில் இந்த நாட்டில் நடந்த பயங்கரம் பற்றி இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும். அதன் பின்னர் தேர்தலில் வெற்றிபெறத் திருமதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு உழைத்தார்கள். அவர்கள் அந்த அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளையும் வகித்தனர்.

அதன் பின்னர் மஹிந்தவின் வெற்றிக்காக உழைத்தார்கள். அதைச் செய்தவர்களின் வரலாற்றைப் பார்க்கும் போது, நாட்டில் 71 கிளர்ச்சி, 83 கறுப்பு ஜூலை, 88/89 பயங்கரவாதம் போன்ற காலங்களில் அரச சொத்துக்களை அழித்து மக்களைக் கொன்றனர், அவர்களின் நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச் செய்தன.

கிளர்ச்சியாளர்கள் ஜனாதிபதி மாளிகையையும், பிரதமர் அலுவலகத்தையும் கைப்பற்றினர். பாராளுமன்றத்தைச் சுற்றி வளைத்து மக்களைக் கொன்று இந்த நாட்டைக் கைப்பற்ற ஒரு குழு முயற்சித்தது. அப்போது ரணில் விக்ரமசிங்க மட்டும்தான் இந்த நாட்டை நான் பொறுப்பேற்பேன், மொட்டுக் கட்சியின் ஆதரவு எனக்கு வேண்டும் என்றார்.

அரசியல் முடிவுகளை எடுப்பதில்லை, நாட்டுக்கு உதவும் முடிவுகளை மட்டுமே எடுப்பேன் என்றார். அதற்கு நாங்கள் சம்மதித்தோம். ஒன்றரை வருட காலப்பகுதியில் நாம் எடுத்த முடிவுகள் மக்கள் தீர்மானங்கள் அல்ல. பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப எடுக்கப்பட்ட சில தீர்மானங்களைச் சிலர் விமர்சித்தாலும் எவராலும் மாற்று வழிகளை முன்வைக்க முடியாது. இதைச் செய்ய முடியாவிட்டால், இதைச் செய்ய வேண்டும் என்று அரசியல் தலைவர்களுக்கு அனுபவம் இல்லை.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகக் கொண்டு வரப்பட்டதை நான் எதிர்த்தேன். அனுபவமில்லாதவர்களை நம்பி நாட்டை ஒப்படைக்க வேண்டாம் என்றேன். அதுபற்றி எங்கள் கட்சி கேட்கவில்லை. ரணில் விக்ரமசிங்க அவர்கள் அனுபவமிக்க தலைவராகப் பொறுப்பேற்ற போது நாங்கள் உதவி செய்தோம். ரணில் விக்ரமசிங்கவை கொண்டு வந்தது எங்கள் கட்சியின் தலைவர்கள்தான் நாங்கள் அல்ல. அவருக்கு உதவ நாங்கள் குழுவாக வழிநடத்துகிறோம் என்றார்.

## ட்ரோன் தடை

ட்ரோன்களை பயன்படுத்துவதற்கு அவசியமானால் அதற்கு முன் அனுமதி பெறவேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இது நாடளாவிய ரீதியில் நடைபெறும் அனைத்து மே தின கூட்டங்கள் மற்றும் பேரணிகளுக்கும் பொருந்தும் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளார்.

## “பிக்கு அபகரித்த காணியை மீட்கவும்”



ஆத்திக்காடு பகுதியில் உள்ள 88 ஏக்கர் காணி பானாமுரே திலகவங்ச நாயக்க தேரர் என்ற பௌத்த பிக்கு ஒருவரின் பெயரில் தற்காலிக இடாப்பு பதிவு மேற்கொள்ளப்பட்டுக் கிட்டத்தட்ட 3 வருடங்களாகச் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதற்காக அரசாங்கத்திடம் இருந்து 20 சிங்கள மக்களின் பெயரில் மானியப் பசளை பெற்று வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

1984ஆம் ஆண்டுக்கு முன்னர் பல வருட காலமாக பரம்பரை பரம்பரையாகக் குறித்த காணிகளில் குச்சவெளி மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வந்ததாகவும், யுத்த நிலைமையின் காரணமாக இடம்பெயர்ந்து சென்று மீண்டும் திரும்பும்போது, குறித்த பகுதியில் இருந்த உறுதி மற்றும் பேமிட் காணிகள் அடங்கலாகப் பெருமளவான விவசாயக் காணிகள் வன வள பாதுகாப்புத் திணைக்களத்தினால் கையகப் படுத்தப்பட்டிருந்ததாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் 88 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட காணிகள் அப்பகுதியில் உள்ள சப்தநாக பப்பத வன

**“ மக்களுடைய உறுதிக் காணிகளும் உள்டங்குவதாக பிரதேச செயலகத்தினால் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது**

செனசுன விகாரைக்கரியது என குறிப்பிட்டு ஆக்கிரமிக்கப்பட்டு புத்த பிக்கு ஒருவரின் தலைமையின்கீழ் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

2018ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ள சப்தநாக பப்பத வன செனசுன விகாரைக்காக 2020.10.02 வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் பூஜா கிராண்ட் மூலம் 20.2343 ஹெக்டேயர் காணி 2020.05.26ஆம் திகதியில் இருந்து 30 வருடகால குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்காணிக்குள் மக்களுடைய உறுதிக் காணிகளும் உள்டங்குவதாக பிரதேச செயலகத்தினால் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## “சமிக்ஞைகளில் பணம் கொடுக்காதீர்”

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

அத்துடன், வீதியில் உள்ள போக்குவரத்து சமிக்ஞை விளக்குகளுக்கு அருகிலிருந்து யாசகம் கேட்போருக்கு வாகனங்களில் உள்ள பயணிகள் பணம் கொடுப்பதைத் தவிர்த்தால் அவர்கள் அங்கு யாசகம் செய்வதைக் குறைக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பொது வேட்பாளரை நிறுத்த தீர்மானம்



■ பு.கஜிந்தன்

ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்

குறித்த ஒன்று கூடல் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தலைமையில் வவுனியா புகையிரத வீதியில் அமைந்துள்ள RH விருந்தினர் விடுதியில், செவ்வாய்க்கிழமை (30) நடைபெற்றது.

இதில் உரையாடலை அகத்தியர் அடிகளார், திருகோணமலை வண. ஆயர் நொயல் இமானுவேல் வேலன் சுவாமிகள் உட்பட 48 சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மத தலைவர்கள் என கலந்து கொண்டிருந்தனர். இதன்போதே, ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## போலி முகநூல் பதிவுக்கு எதிராக வழக்கு

■ அப்துல்சலாம் யாசீம்

போலி முகநூல் பதிவொன்றுக்கு எதிராக திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் செவ்வாய்க்கிழமை(30) வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின்கீழ், மனுவை சட்டத்தரணி நாகராஜா மோகன் தாக்கல் செய்திருந்தார். குறித்த மனுவை ஆதரித்து சிரேஷ்ட சட்டத்தரணி இராமலிங்கம் திருக்குமாரநாதன் மன்றில் சமர்ப்பணம் செய்திருந்தார்.

மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா தலையில் மனு ஆராயப்பட்டது.

மெய்யுறுதிப்படுத்தப்படாத முகநூல் நிகழ்நிலைக் கணக்கினை பயன்படுத்துபவரது ஆள் அடையாளம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும், குறித்த முகநூல் கணக்கு பயன்படுத்தப்படும் அமைவிடம் அவற்றோடு தொடர்புடைய ஏனைய நிகழ்வுகள் பற்றிய விடயங்கள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும், போன்ற விண்ணப்பங்களை முன்வைக்கப்பட்டது.

முகநூல் நிறுவனத்திடமிருந்தும், டயலொக் நிறுவனத்திடமிருந்தும் மேற்குறித்த விடயங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய விபரங்களை உடனடியாக பெறுவது தொடர்பாகவும் அவற்றை உடனடியாக நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பது தொடர்பாகவும் தேவையானதும், அவசியமானதுமான நடவடிக்கைகளை எடுக்குமாறு கொழும்பு 01இல் செயற்படுகின்ற குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் கணினி குற்றங்கள் விசாரணைப் பகுதியின் சமூக ஊடகப் பிரிவின் பணிப்பாளருக்கு உத்தரவிடுவதற்கான கட்டளையினை பிறப்பிப்பாக்குமாறு கோரப்பட்டது.

குறித்த விண்ணப்பங்களை ஏற்ற மாவட்ட நீதவான் குறித்த கட்டளையைப் பிறப்பித்திருந்தார்.

## மின்னல் தாக்கத்தில் அண்ணா, தங்கை பலி

இரத்தோட்டை, டான் கந்த தங்கந்த கல்லூரியில் தரம் 8இல் கல்வி கற்கும் திலிப பிரபோத குணரத்ன மற்றும் அவரது தங்கையான ஒசாதி செவ்வந்தி குணரத்ன ஆகியோரே மின்னல் தாக்கத்தினால் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் திங்கட்கிழமை (29) மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன், அன்று மாலை பெய்த மழையுடன் தங்கந்த பிரதேசத்தில் பல மின்னல்கள் தாக்கியதாகவும், சுற்றுவட்டாரத்தில் உள்ள பல வீடுகள் மின் மீட்டர்கள், மின்குமிழ்கள், தொலைக்காட்சிகள் உள்ளிட்டவை சேதமடைந்துள்ளதாக தங்கந்த பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

விபத்தின் பின்னர் அயலவர்கள் இணைந்து இவ்விருவரையும் மீட்டு இரத்தோட்டை பொது வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதுடன், குறித்த இளைஞனும் சிறுமியும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளதாக இரத்தோட்டை வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

“தீர்வை பெற்றுக்கொடுக்க

# முயற்சிக்கின்றோம்”




சாமானியர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க முயற்சிக்கின்றோம் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

சிறந்த விவசாய பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் - கைதடியில் உள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (30)) நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மிகக் குறுகிய காலத்திற்குள் சிறந்த விவசாய பயிற்சி (GOOD AGRICULTURE PRACTICES) திட்டத்திற்குள் 2,000 விவசாயிகளை உள்வாங்கியமை மிகச்சிறப்பான செயற்பாடென ஆளுநர் கூறியுள்ளார்.

அத்துடன், நவீன விவசாய பொறிமுறை தொடர்பான அறிவை இந்த திட்டத்தினூடாக விவசாயிகளுக்குப் பெற்றுக்கொடுக்கின்றமை வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

விவசாயம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் ஒருங்கிணைந்த செயற்பாடு அவசியமாகக் காணப்பட வேண்டும். இதற்காக மத்திய, மாகாண அமைசுக்களுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் இணைத்துச் செயற்படுகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது.

மற்றும், விவசாயிகள் எதிர்நோக்கும் சிக்கல்கள் குறித்துப் பல சந்தர்ப்பங்களில் பேசப்படுவதில்லை.

இந்த விடயம் தொடர்பில் அனைவரும் கரிசனையுடன் செயற்பட வேண்டும்.

அந்தவகையில்,

சாமானிய பொது மகன் ஒருவர் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பிலும் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க முயற்சிப்பதாகவும் கூறியுள்ள ஆளுநர், பொதுமக்களுக்கான நிலையான மற்றும் சிறந்த சேவையினை வழங்க ஒருங்கிணைந்து செயற்படுவது அவசியம் எனவும் இவ்வாறான செயற்பாடுகளை அனைவரிடமிருந்தும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.




விமான நிலையத்தில் துப்பாக்கி வெடிப்பு

## விமானப்படை வீரர் கைது

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விசேட பிரமுகர்கள் பயன்படுத்தும் முனையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த இலங்கை விமானப்படையின் விமானப்படை வீரர் ஒருவரின் துப்பாக்கி செவ்வாய்க்கிழமை (04) காலை தீடிரென வெடித்ததில் முனையத்தின் கூரை சேதமடைந்துள்ளது.

சிறிலங்கா விமானப்படையின் தலைமை விமானப்படையைச் சேர்ந்தவரிடம் இருந்த T-56 ரகத் துப்பாக்கி தவறுதலாகக் காலை 10.30 மணியளவில் வெடித்துள்ளது என்றும் இதனால், உயிர்ச் சேதம் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில், பணம் செலுத்தி வசதிகளைப் பெறும் சிறப்பு விசேட விருந்தினர்கள் மற்றும் உலகின் முன்னணி வர்த்தகர்கள் இந்த முனையத்தின் ஊடாக அடிக்கடி பயணங்களை மேற்கொள்கின்றனர்.

கடமையில் இருந்த விமானப்படை வீரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் மற்றும் இலங்கை விமானப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஐஸுடன் இருவர் கைது





ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்தில் வைத்து ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் செவ்வாய்க்கிழமை (30) அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணை பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமையவே குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதன்போது, மோட்டார் சைக்கிள் ஒன்றில் கீழ்ப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், 14,570 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர்கள் காத்தான்குடி மையவாடி வீதி மற்றும் காத்தான்குடி ஆறாம் குறிச்சி பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் அதில் ஒருவர் பிரபல மென்பானம் ஒன்றின் முகவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்களை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 3 உணவகங்களுக்கு சீல்

எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த மூன்று உணவகங்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகரின் திடீர் பரிசோதனையின்போது, திருநெல்வேலி பகுதியில் மூன்று உணவகங்கள் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்துள்ளன. அது தொடர்பில் சுகாதார பரிசோதகரால் உணவக உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டு, குறைகளைச் சீர் செய்யக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

மறு பரிசோதனைக்காக திங்கட்கிழமை (29) குறித்த உணவகத்திற்கு பொதுச் சுகாதார பரிசோதகர் சென்ற போது குறைகள் சீர் செய்யப்படாததையடுத்து, மூன்று உணவக உரிமையாளர்களுக்கு எதிராக யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணையின் போது உரிமையாளர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டுள்ளதுடன், அவர்களுக்கு 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்த மன்று, உணவாகச் சுகாதார சீர்கேடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் உணவகங்களுக்குச் சீல் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

## கஜமுத்துக்களுடன் ஒருவர் கைது

கனகராசா சரவணன்



மட்டக்களப்பு- காந்தி பூங்காவில் வைத்து கஜமுத்துக்களுடன் ஒருவர், விசேட அதிரடிப்படையினரால் திங்கட்கிழமை (29) மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படைக்குக் கிடைக்கப்பெற்ற தவலொன்றிக்கமைய மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது, மயிலவெட்டுவான் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர், கஜமுத்துக்களை விற்பனைக்காகக் கொண்டுவந்து, காத்துக்கொண்டிருந்தபோது, மாறுவேடத்தில் இருந்த விசேட அதிரடிப்படையினர் அவரை சுற்றிவளைத்து கைது செய்துள்ளனர்.

இதன்போது, 2.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான 11 கஜமுத்துக்களை மீட்கப்பட்டதாகவும், சந்தேக நபரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மே தின இசை கச்சேரிக்கு இந்திய பாடகர்கள் வந்தனர்



அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேசிய மே தின பேரணியுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இசை நிகழ்ச்சியில் பாடுவதற்காக இந்தியாவிலிருந்து பாடகர்கள் குழுவொன்று செவ்வாய்க்கிழமை (30) பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

விஜய் பாலகிருஷ்ணன், ரம்யா நாகர்கோவில், டேனியல் ஜெயராம், ரேஷ்மா சுந்தரம் ஆகிய பாடகர்களே இவ்வாறு வருகை தந்துள்ளனர்.

இந்த இசை நிகழ்ச்சி மாளிகாவத்தை, பி.டி. சிரிசேன விளையாட்டு மைதானத்தில் மே 01ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மேலும், இந்திய இசைக்கலைஞர்களான சத்ய பிரகாஷ் தர்மர் மற்றும் நூராணி வஷர் ஆகியோரும் இந்த இசை நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக இலங்கைக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாட்டி பருக வேண்டியதை பருகிய பேத்தி மரணம்

செ.திவாகரன், டி.சந்ரு



பாட்டி பருகவேண்டிய இரத்த அழுத்தத்தைக் கட்டுக்குள் வைத்திருக்கும் மாத்திரைகளைப் பருகிய பேத்தி, மரணமடைந்த சம்பவமொன்று நுவரெலியாவில் இடம்பெற்றுள்ளது.

நுவரெலியா ஸ்கிராப் தோட்டத்தில் வசிக்கும்15 வயதான பாடசாலை மாணவி ஒருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி பாட்டி வீட்டில் இல்லாத நேரத்தில் பாட்டியின் மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்டு மயக்கம் உற்ற நிலையில் அயலவர்களின் உதவியுடன் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி 27ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, குறித்த சிறுமியின் தந்தை வேறொரு பெண்ணை திருமணம் செய்து நானுஓயா பிரதேசத்தில் தனியாக வாழ்ந்து வந்துள்ளார். நுவரெலியா பொலிஸாரின் உதவியுடன் சிறுமியின் சடலம் (29) தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## “நாட்டை முன்னேற்ற ஒன்றிணையவும்”



வழமையான மே தினக் கொண்டாட்டத்திற்கு மட்டுப்படுத்தாமல், நவீன போக்குகளையும் சவால்களையும் உணர்ந்து, நாட்டை வெற்றிபெறச் செய்வதற்காக, மக்கள் சார்பாக ஒருமித்த கருத்தை எட்டுவதற்கான வாய்ப்பாக இந்த மே தினத்தை எடுத்துக் கொள்வோம் என அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கிறேன் என்றும் நாட்டை முன்னேற்றுவதற்காக அனைவரும் ஒன்றிணையுமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது மே தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், உரிமைகள் மற்றும் கோரிக்கைகளுக்கான போராட்டத்தின் விளைவாக தொடங்கிய உலக தொழிலாளர் தினத்தின் 138ஆவது வருட கொண்டாட்டத்தின் போது, ஒரு நாடாக நாம் ஒரு முக்கியமான கட்டத்தை எட்டியிருக்கிறோம். நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் சவாலை முறியடிக்க வேண்டிய தவிர்க்க முடியாத பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது. அதற்காக ஒன்றிணைந்து உரிய திட்டமிடலுக்கூடாக பணியாற்ற வேண்டும்.

கடந்த பொருளாதார வீழ்ச்சியின் போது இந்த நாட்டின் உழைக்கும் மக்கள் தான் அதிகமான சவால்களை எதிர்கொண்டார்கள். எல்லாவற்றிலும் விடாமுயற்சியுடன் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றி வரும் அனைத்து உழைக்கும் மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து செய்யும் அந்த எல்லையற்ற அர்ப்பணிப்பின் பலன்களை நாட்டில் கண்டுகொள்ளலாம். தற்போது இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருவதுடன் பணவீக்கத்தை கணிசமான அளவிற்கு குறைத்து ரூபாயை பலப்படுத்த முடிந்திருப்பது அரசாங்கத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

உழைக்கும் மக்களை தொடர்ந்தும் வறியவர்களாகவே வைத்திருப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல. போராட்டமின்றி அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ‘அஸ்வெசும’ மற்றும் ‘உறுமய’ திட்டங்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன. பெருந்தோட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதன் மூலம் அவர்களின் மேம்பாட்டிற்காக பரந்துபட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் நிலையிலும் அரசாங்க ஊழியர்களின் சம்பளம் பத்தாயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு இணையாக தனியார் துறையினரும் முழுமையான பங்களிப்பை வழங்கியுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

## “நாட்டைக் கட்டியெழுப்ப உறுதியுடன் ஒன்றிணைவோம்”



உழைக்கும் மக்களின் உதிரம், வியர்வை மற்றும் உயிர்த் தியாகங்கள் மீதான பயணத்தின் வரலாற்றுப் பதிவாக 138ஆவது உலகத் தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுகிறோம் என பிரதமர் தினேஷ் குணவர்தன தனது மே தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இம்முறை அதனை எமது தொழிற் சூழல்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்ட, வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியின் முக்கியமானதொரு தருணத்திலேயே கொண்டாடுகிறோம்.

எனினும் எத்தகைய உடன்படிக்கைகளுக்கு மத்தியிலும் தொழிலாளர் உரிமைகளைப் புறக்கணிக்கும் வகையில் நாங்கள் செயற்படவில்லை. உழைக்கும் மக்களுடனான உரையாடல்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களின் அடிப்படையிலேயே தொழிற்சூழலை முடிவு செய்கிறோம்.

இவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொண்ட உலகில் உள்ள பல நாடுகள் உழைக்கும் மக்களின் பலத்தினாலேயே மீண்டெழுந்தன. இவ்வாறு பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு உழைக்கும் மக்கள் தொடர்ந்து வழங்கிய அர்ப்பணிப்புகளுக்கும் பங்களிப்புகளுக்கும் நான் எனது விசேட மரியாதையைச் செலுத்துகிறேன். இதன் மூலம் எல்லாத் துறைகளிலும் ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டது.

அரச மற்றும் தனியார்த்துறை மற்றும் சுயதொழில் போன்றவற்றை பொருளாதார சக்திகளாக வலுப்படுத்தப் பாடுபடுவோம். அவ்வாறே, எமது நாட்டிலும், விவசாய சமூகத்தினர் நாட்டை உணவில் தன்னிறைவு அடையச் செய்வதற்காக முன்னின்று ஏற்படுத்திய மறுமலர்ச்சியை நாம் மிகுந்த மரியாதையுடன் நினைவுகூர வேண்டும். உழைக்கும் மக்கள் அரசாங்கத்திற்கும், அரசாங்கம் உழைக்கும் மக்களுக்கும் பெற்றுக்கொடுத்த வெற்றிகள் ஏராளம். இந்த வெற்றிகளோடு இக்கட்டான சவால்களை முறியடிக்க உழைக்கும் மக்களின் உறுதியுடன் இன்று நாம் அடைந்துள்ள நிலையைப் பாதுகாக்கப் பாடுபடுவோம். இதன் மூலம், மிகவும் நிலைபேறானதும் நம்பகமானதுமான எதிர்காலத்தை அடைய நாங்கள் ஒன்றிணைவோம். அதற்கு உழைக்கும் மக்களும், முதலாளிமார் சம்மேளனங்களும், அரசும் முத்தரப்பு புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். வென்றெடுத்த உரிமைகளைப் பாதுகாத்து நாட்டைக் கட்டியெழுப்ப உறுதியுடன் ஒன்றிணைவோம் என்றுள்ளார்.

## “பாதுகாக்க ஒன்றுபடுவோம்”



இன, மத, சாதி வேறுபாடின்றி நாட்டிற்காக அனைவரும் ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கிறேன். உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளை ஒரு நாளில் மட்டும் அல்லாது வருடம் முழுவதும் பாதுகாக்க ஒன்றுபடுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தனது மே தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பல வருடங்களாக, பல பாரதூரமான அவலங்களை எதிர்கொண்டு, நமது நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் மே தினத்தைக் கொண்டாடி வருகின்றனர். இதில் எந்த மாற்றமும் இல்லாமலே, இந்த ஆண்டும் மே தினத்தையும் நமது நாட்டுத் தொழிலாளர்கள் தலைமையில் ஒட்டுமொத்த மக்களாலும் கொண்டாடப்படுகிறது.

போலியான அலை ஊடாக திறமையற்றதொரு ஜனாதிபதியைப் பதவியில் அமர்த்தி நாடே வங்குரோத்து நிலைக்குத் தள்ளியது. எஞ்சியதை மக்கள் ஆணையை இழந்த நிழல் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலையில், இவ்வருடம் மே தினம் கொண்டாடப்படும் போதும் எமது நாட்டு உழைக்கும் மக்கள் பாரிய சவால்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நாளுக்கு நாள் வாழ்க்கைச் செலவு அதிகரித்து வரும் நிலையில், தற்போதுள்ள வாழ்க்கைச் செலவுக்கு சற்றும் பொருந்தாத சம்பளத்தால் வேலை செய்யும் தொழிலாளர் வர்க்கம் மிகவும் அவலம் நிறைந்த வாழ்க்கை வாழ வேண்டி ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் தற்போதைய அரசாங்கம் தேசிய கடனை மறுசீரமைப்பதில் பெரும் செல்வந்தர்கள், நட்பு வட்டார நண்பர்களைத் தவிர்த்து உழைக்கும் மக்களின் சேமலாப நிதியங்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தை வார்த்தையால் சொல்லி முடிக்க முடியாது. அவ்வாறே, நாட்டின் பொருளாதார இயக்கிகளான நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகள் பல்லாயிரக்கணக்கில் மூடப்பட்டு வருவதனால் வேலையில்லா திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தொழிலாளர் உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கும் தலைவர்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் கூட வாய் திறக்காத இத்தருணத்தில், நாட்டின் மாற்று அரசாங்கமாகிய நாம் உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறோம்.

அப்போதிருந்து, இந்த பயங்கரமான சூழ்நிலையை நாங்கள் நிச்சயமாக எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று நாங்கள் தொடர்ந்து எச்சரித்தோம், அது அனைத்தும் இன்று யதார்த்தமாகிவிட்டது.

நாம் இப்போது தேர்தல் ஆண்டிற்கு வந்திருக்கிறோம். இம்முறையும் ஏமாற்று பேரணிகளுக்கு ஏமாறாமல் இந்நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் சொந்தக் காலில் நிற்கச் செய்யும் பொறுப்புக்கூறக் கூடிய அரசாங்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது. இதன் பிரகாரம், இந்த ஆண்டு நாம் அனைவரும் ஒன்றிணைந்து மக்களை ஒடுக்கும் இந்த பயங்கர அரசை விரட்டியடித்து மக்கள் சார், மக்களுக்காக அர்ப்பணித்துச் செயற்படும் அரசாங்கத்தையும், தலைவரையும் நியமித்து மீண்டும் ஒரு நாடாக எழுந்து நிற்க வேண்டிய தருணம் வந்துள்ளது.

இதனை அடையும் பொருட்டு, இன, மத, சாதி வேறுபாடின்றி நாட்டிற்காக அனைவரும் ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கிறேன். உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளை ஒரு நாளில் மட்டும் அல்லாது வருடம் முழுவதும் பாதுகாக்க ஒன்றுபடுவோம் என்றும் தெரிவித்துள்ளார்.

# உரிமைக்குரல்கள் ஒலிக்காது மௌனிக்கும் உழைப்பாளர் தினம்

வருடம் முழுதும், 'மாடாய் உழைத்து ஓடாய்த் தேயும்' தொழிலாளர்கள், தங்களுடைய உரிமைகளை வென்றெடுப்பதற்காக, உரத்துக் குரல்கொடுக்கும் தினமான உழைப்பாளர் தினம் (மே 1), பல கோரிக்கைகளுடன் இன்று(01) உலகளவில் கொண்டாடப்படுகின்றது.

சிக்காகோ தியாகிகளின் தியாக தினமான 'மே தினம்' உழைப்பாளிகளின் ஆற்றலின் தேவையை உணர்த்தவும் போற்றவும் வேண்டிய தொழிலாளர்களின் எழுச்சிமிக்க மே 1ஆம் நாள், உண்மையான நோக்கத்திலிருந்து கடந்த காலங்களில் தலைகுப்புற விழுந்துவிட்டது.

மே தினக் கொண்டாட்டங்கள் பலமுறை தவிர்க்கப்பட்டன. எமது நாட்டைப் பொறுத்தவரையில் இது முதற்றடவையல்ல. 1965இல் அரசாங்கம் மேதினத்தைத் தடை செய்தது. 1987 ஏப்ரல் 21ஆம் திகதியன்று புறக்கோட்டையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தாக்குதலை அடுத்து, மே தினக் கொண்டாட்டங்கள் தடை செய்யப்பட்டன.

2018 மே 1ஆம் திகதி, வெசாக் போயா தினம் என்பதால், மகாநாயக்கர்களின் வேண்டுகோளுக்கிணங்க, ஆறு நாள்களுக்குப் பின்னரே, மே தினக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. தொழிலாளர்களின் தினத்தில் இவ்வாறு பல, முன், பின் ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டன. இலங்கையைப் பொறுத்தவரையிலும், கடந்த மூன்று ஆண்டுகளாக, மே 1 மௌனித்தது.

நாடு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் மிக இக்கட்டான நெருக்கடியாக்கச் சூழலில், அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுப்பது, அவ்வளவுக்கு உசிதமானது அல்ல. எனினும், அவ்வப்போது அறிவிக்கப்பட்ட தொழிற்சங்கப் போராட்டங்கள், ஓரிரு மணி நேரத்துக்குள் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸைக் காரணம் காட்டி, தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்காமல் விட்டுவிட்டது. இலங்கையைப் பொறுத்தவரையில், தொழிலாளர்களின் பாடு, பெரும் திண்டாட்டமாகவே உள்ளது. பெரும் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் அரசாங்கத்துக்கு, அழுத்தம் கொடுப்பதென்பது இயலாத காரியமாகும். அதைச் சாதகமாகப் பயன்படுத்தி, தொழிலாளர்களைத் தொடர்ந்தும் வஞ்சிக்காது, அவர்களையும் ஏறெடுத்துப் பார்க்கவேண்டும் என்பதே, எங்களது வலியுறுத்தலாகும்.

தொழிலாளர்களின் உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கும் தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகளாகிவிட்டன. இல்லையேல், அரசியல் கட்சிகளுடன் சங்கமித்துவிட்டன. இதனால், தொழிலாளர்களுக்கான கோரிக்கைகள் அரசியல் கோரிக்கைகளாகி விட்டன. இது, அரசாங்கத்துக்கு பாரியளவில் அழுத்தம் கொடுப்பதாய் இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும், அரசியல் சாயம் பூசப்பட்டுவிடுமாயின், உரிமை குரல்கள் மௌனித்துவிடும்.

நமது நாட்டை பொறுத்தவரையில், ஒருசில தொழிற்சங்கங்கள் மட்டுமே, அரசியல் கலப்படமில்லாது இருக்கின்றன. ஏனைய தொழிற்சங்களுக்கு பின்னால், அரசியல் இருக்கும்.

அவ்வாறான தொழிற்சங்கங்கள், அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதாகப் பம்மாத்து காட்டிக்கொண்டிருக்கும். இல்லையேல், உரிமைக் குரல்களைக் கொடுக்கும் தொழிற்சங்கங்களின் போராட்டங்களை காட்டிக்கொடுக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்கும். வென்றெடுக்கப்பட்ட தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதே எமது குரலாகும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

அச்சம், பயம் சஞ்சலம் இவையெல்லாம் ஒரே கருத்தாகத் தோன்றலாம். ஆனால், சதா மனம் குழம்பியப்படியே இருப்பது சஞ்சலம். பயம், சில சந்தர்ப்பங்களில் எவருக்கும் நேரலாம். ஆனால், எல்லா விடயங்களுக்கும் தன்னை இழந்திருப்பது அச்சத்தின் வெளிப்பாடாகும்.

சில விஷயங்களில் நாம் சந்தர்ப்பங்களுக்கு ஏற்பட நடந்து கொள்ளவேண்டும். ஒருவன் குடிபோதையில் கத்தியுடன் தன்பாட்டிற்குச் செல்லும்போது அவனை மறித்து உபதேசம் செய்யலாகாது. இது அச்சமற்ற செயல் அல்ல. வீரத்தை எல்லா நேரங்களிலும் காட்டலாகாது.

சும்மா போனவனைச் சண்டைக்கு இழுக்கலாகாது. அதன் விபரீதம் பெரிதாகலாம். அது கோஷ்டிச் சண்டையாகவும் மாறிவிடலாம். சில சந்தர்ப்பங்களில் கோழையும் வீரனாகின்றான். ஒருவரை வலிந்து தொடர்ந்து இம்சித்தால், அவன் சிங்கம் போல எழுந்து தாக்கி வீழ்த்திவிடுவான்.

துன்பமான விடயங்களை எதிர்கொண்டவர்கள் அச்சத்தைத் துச்சமாக்கிவிடுகின்றார்கள். வாழ்க்கையில் துணிவு பிரதானமானது. முன்னேற்றத்தை இது உருவாக்கும்.

- பருத்தியூர் பால வயிரவநாதன்.

## கடிதங்கள்

### குப்பைத்தொட்டிகள் அவசியம்

நுவரெலியாவில் ஏப்ரல் மாதத்தில் ஆண்டுதோறும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். குறிப்பாக நகரில் போதிய குப்பைத் தொட்டிகள் வைக்கப்படாத நிலையில் குப்பைகளை வீதியில் வீசிச் செல்வதால் நகரம் அசுத்தப்பட்டு சுகாதார சீர்கேடான நிலையில் பாதிக்கப்பட்டு வருவதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வீசிச் செல்லும் கழிவுகளை உணவாகத் தேடி கால்நடைகள் அப்பகுதியை முற்றுகையிடுகின்றது. இதில் நாய்கள் , பறவைகள் அவற்றை நாலாபுறமும் இழுத்துச் சென்று போடுவதால் நடைபாதை மற்றும் பிரதான நகரம் அலங்கோலமாகக் காட்சி தருகின்றது. வாகனச் சாரதிகளும் பாதிக்கப்படுகின்றனர் இவை மூலம் ஈக்களின் பெருக்கம் அதிகரித்து ஈக்களால் பரப்பப்படும் வியாதிகளும் தொற்றும் ஆபத்துள்ளதாக இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

தேவைக்கேற்ப குப்பைத் தொட்டிகள் வைப்பது அவசியம் எனவும் குறித்த பகுதிக்குப் பொறுப்பான சுகாதார அதிகாரிகள் இதனைக் கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுகின்றனர்.

- செ.திவாகரன் டி.சந்ரு



## மே தினத்தை கொண்டாடுவதற்கு

# யாருக்கு உரிமை இருக்கிறது?



எம்.எஸ்.எம்.ஐயூப்

மே தினத்தை அதாவது சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நாட்டில் ஏறத்தாழ சகல பிரதான அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துகின்றன.

ஆயினும் அவற்றை நடத்தும் அமைப்புக்களில் தலைவர்களிடம் அத்தினத்தின் முக்கியத்துவம் என்ன என்று கேட்டால் எத்தனைப் பேர் அதற்கு ஓரளவாவது பொருத்தமான பதிலைத் தருவார்களோ தெரியாது.

தற்போது மே தினமானது அரசியல் கட்சிகள் தமது பலத்தை ஏனைய கட்சிகளுக்கும் பொது மக்களுக்கும் காட்டுவதற்கான நாளாகவே பாவிக்கப்படுகிறது. அதற்காக அவர்கள் தம்மால் முடிந்த வரை அதிகளவில் தமது ஆதரவாளர்களை பெரும்பாலும் கொழும்புக்கு அழைத்து வந்து ஓர் ஊர்வலத்தையும் ஒரு கூட்டத்தையும் நடத்துகிறார்கள். பெருமளவில் மக்கள் ஆதரவு இல்லாத கட்சிகள் கூட்டம் ஒன்றை மட்டும் நடத்துகின்றன.

அதற்காக மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட ஓரிரு கட்சிகளைத் தவிர ஏனைய கட்சிகளும் தொழிற்சங்கங்களும் தமது ஆதரவாளர்களுக்குப் பணம், உணவு மற்றும் மதுபானம் ஆகியவற்றை வழங்கி அவர்களை பஸ்களில் அழைத்து வருகின்றன. எனவே ஆதரவாளர்கள் அல்லாதோரையும் சேர்த்துக்கொள்ள அவர்களால் முடிகிறது.

அவ்வாறு ஆதரவாளர்களுக்குப் பணம், உணவு மற்றும் மதுபானம் வழங்காமல் மக்கள் விடுதலை முன்னணி தமது மே தினக் கூட்டத்துக்கு வருடந்தோறும் பெரும் எண்ணிக்கையில் ஆதரவாளர்களை அழைத்து வருகிறது.

மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து பிரிந்து தற்போது சுயாதீனமாகச் செயற்படும் முன்னிலை சோசலிச கட்சியும் பணம், உணவு மற்றும் மதுபானம் வழங்காது தமது ஆதரவாளர்களை தமது மே தினக் கூட்டத்துக்கு வருடாந்தம் அழைத்து வருகிறது. ஆயினும் அக்கூட்டங்கள் மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டங்களைப் போல் பாரியவை அல்ல. சோபிப்பவையும் அல்ல.

1971இல் தமது முதலாவது கிளர்ச்சியை அடுத்து மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள். 1977இல் சிறையிலிருந்து விடுதலையான அவர்கள் இன்று வரை ஓரிரு வருடங்களைத் தவிர ஏனைய வருடங்களில் நடத்திய மே தினக் கூட்டங்களே அந்தந்த வருடத்தில் மிகப் பெரிய கூட்டமாகவும் பேரணியாகவும் காணப்பட்டன.

மே தினமானது பாட்டாளி வர்க்கத்தின் தினமாகவே கருதப்படுகிறது. ஆனால், அம்மக்களின் நலன்களைப் பார்க்கிலும் இந்நாட்டின் செல்வந்தர்களின் நலன்களைப் பாதுகாத்து வரும் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளும் மே தினக் கூட்டங்களையும் பேரணிகளையும் நடத்தி வருகின்றன.

ஆயினும், அவை தம்மோடு இருக்கும் சாதாரண மக்களையே ஏமாற்றும் நடவடிக்கையாகவே காணப்படுகின்றன. ஏனெனில், அக்கட்சிகள் பதவியிலிருந்த காலங்களில் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்ததாக பொதுவாகக் கூற முடியாது. மாறாக அக்கட்சிகள் முக்கிய சந்தர்ப்பங்களில் தொழிலாளர் போராட்டங்களை நசுக்கியுள்ளன.

இன்றைய அரசியல் கட்சிகளில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் மற்றும் இடதுசாரி கட்சிகளைத் தவிர்ந்த ஏறத்தாழ ஏனைய சகல கட்சிகளும் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்தும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்தும் பிரிந்தவையாகும்.

(ஸ்ரீல.சு.கவும் 1951இல் ஐ.தே.கவிலிருந்தே பிரிந்தது) எனவே, அக்கட்சிகளும் தத்தமது தாய் கட்சியின் கடந்த கால நடவடிக்கைகளுக்குப் பொறுப்பைக்கூறித் தான் ஆகவேண்டும்.

தமது ஆட்சிக் காலத்திலேயே ஊழியர் சேமலாப நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது என்றும் மே தினம் விடுமுறையாக பிரகடனப்படுத்தப்பட்டது என்றும்

ஸ்ரீல.சு.க மார் தட்டிக்கொள்கிறது. உண்மை தான். மக்கள் ஐக்கிய முன்னணி என்ற கூட்டணியின் தலைவராக காலஞ்சென்ற பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர். டி.பண்டாரநாயக்க பிரதமராக இருந்த போது 1956இலேயே மே தினம், விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

அதேபோல் அவரது காலத்திலேயே, அதாவது 1957இலேயே தனியார்த்துறை ஊழியர்களின் இறுதிக் கால நலனுக்காக ஊழியர் சேமலாப நிதியம் உருவாக்கப்பட்டது.

ஆனால், அதே காலத்தில் தான் நாட்டில் மிகப்பெருமளவில் வேலை நிறுத்தங்கள் இடம்பெற்றுள்ளன. அக்காலத்தில் ஒரு வருடத்தின் நாட்கணக்கைப் பார்க்கிலும் கூடுதலான எண்ணிக்கையில் வேலை நிறுத்தங்கள் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

"எனது கணவரைக் கொல்லாமல் கொன்று விட்டவர் என்.எம்.பெரேராவே" என்ற பண்டாரநாயக்கவின் மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க பிற்காலத்தில் கூறியதாகவும் கூறப்படுகிறது.

(என்.எம்.பெரேரா அக்காலத்தில் வேலை நிறுத்தங்களை வழிநடத்திய லங்கா சமசமாஜ கட்சியின் தலைவராக இருந்தார்.) அதாவது அந்தளவுக்கு அக்காலத்தில் தொழிலாளர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கினர்.

அதேபோல் அத்தியாவசிய சேவை என்ற போர்வையில் வேலை நிறுத்தங்களைத் தடைசெய்யக்கூடிய வகையில் மிகக் கொடூரமான அடக்குமுறை சட்டமான பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் அக்காலத்திலேயே திருத்தப்பட்டது.

1972இல் ஸ்ரீல.சு.க. தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்கவின் தலைமையிலான அரசாங்கம் மூன்றில் இரண்டு வாக்குப் பலமில்லாமல் அச்சட்டத்தைத் திருத்த முடியாதவாறு அதனை அரசியலமைப்புச் சட்டத்தின் அங்கமாக்கியது.

தொழிலாளர் வர்க்கத்தைப் பற்றி வாழ்நாள் முழுதும் கூச்சலிட்ட முன்னாள் அமைச்சர் கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வாவே அதற்கான அரசியலமைப்பு மாற்றங்களை வரைந்தார். 1980இல் நாடு தழுவிய பொது வேலை நிறுத்தம் ஒன்று ஆரம்பிக்கப்பட்ட போது அச்சட்டத்தைப் பயன்படுத்தி ஐதேக அரசாங்கம் 40,000க்கு அதிகமான ஊழியர்களைச் சேவையிலிருந்து நீக்கியது.

அனுர பண்டாரநாயக்க முதன்முதலாக நுவரெலியாவில் போட்டியிட்ட 1977இல் பொதுத் தேர்தலை கருத்திற்கொண்டு ஸ்ரீல.சு.க. தலைமையிலான அரசாங்கம் மலையகத்தில் பல தேயிலைத் தோட்டங்களைப் பிரித்து கிராமவாசிகளிடம் பகிர்ந்தளித்தது. இதனை தோட்டத் தொழிலாளர்கள் எதிர்த்தனர்.

1976இல் இவ்வாறான தோட்டத் தொழிலாளர் போராட்டமொன்றின் போது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் தலவாக்கலை டெவொன் தோட்டத்தைச் சேர்ந்த சிவன் இலட்சுமனன் என்ற தொழிலாளி கொல்லப்பட்டார்.

1996இல் மின்சார சபை ஊழியர்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தம் செய்தனர். ஸ்ரீல.சு.க. தலைவியான சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம் இராணுவ ஆட்சியைப் போல் இராணுவத்தை அனுப்பி ஊழியர்களைப் பலவந்தமாக அழைத்து வந்து அவர்களை வேலை செய்யச் செய்தது.

தொழிலாளர்களின் பெயரால் அரசியல் நடத்தும் சமசமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்ற கட்சிகளும் அந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்தன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரபும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானும் அந்த அரசாங்கததில் அமைச்சர்களாக இருந்தனர்.

அடுத்து பதவிக்கு வந்த ஸ்ரீல.சு.க. தலைவரான மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஊழியர் சேமலாப நிதியத்தைப் பற்றிய ஒரு சர்ச்சை காரணமாக கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தின் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்த போது ஒரு தொழிலாளி சுட்டுக் கொல்லப்பட்டார்.

தமது படகுகளுக்கான எரிபொருளின் விலையைக் குறைக்குமாறு கோரி சிலாபத்தில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய போது ஒரு மீனவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த அரசாங்கத்திலிருந்த சிறுபான்மைக் கட்சித் தலைவர்களும் அவ்வரசாங்கத்திலிருந்து விலகிய பின்னராவது அப்படுகொலைகளை விமர்சிக்கவில்லை.

ஐ.தே.கவும் இதேபோல் தான் தொழிலாளர் வர்க்கத்தை நடத்தியது. 1980 ஜூன் மாதம் 5ஆம் திகதி நாட்டில் பல துறைகளைச் சேர்ந்த ஊழியர்கள் மாதச் சம்பளத்தை 300 ரூபாவால் அதிகரிக்குமாறு கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்போது ஐ.தே.க. குண்டர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்கி சோமபால என்ற தொழிலாளரைக் கொன்றனர். விலைவாசியையும் அந்தக் கொலையையும் எதிர்த்து அந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த போது தொழிலாளர்களை "கனத்தைக்கு" (மயானத்துக்கு) அனுப்புவதாக அப்போது தேசியப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலி அச்சுறுத்தல் விடுத்தார்.

வேலைநிறுத்தம் செய்த 40,000க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டனர். அதனால் பிற்காலத்தில் வேலையிழந்த பல தொழிலாளர்கள் தங்கள் உயிர்களை மாய்த்துக்கொண்டனர். ஸ்ரீல.சு.கவும் இந்த வேலைநிறுத்தத்தை ஊக்குவித்த ஒரு கட்சியாகும். தாம் பதவிக்கு வந்தால் இந்தப் போராட்டத்தால் வேலையிழந்த தொழிலாளர்களை மீண்டும் சேவையில் அமர்த்துவதாக ஸ்ரீல.சு.க. தலைவர்கள் வாக்குறுதி அளித்தனர்.

அதனை அடுத்து சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் 1994 முதல் 2014 வரை 20 வருடங்களாக ஜனாதிபதிகளாகப் பதவி வகித்த போதிலும் அந்த வாக்குறுதி பூரணமாக நிறைவேற்றப்படவில்லை.

இன்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இருப்பவர்கள் அன்று ஸ்ரீல.சு.கவில் இருந்தவர்களேயாவர். இன்று ஐக்கிய மக்கள் சக்தியில் இருப்பவர்கள் அன்று ஐ.தே.கவில் இருந்தவர்களேயாவர்.

எனவே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் தாம் இந்தப் பாவங்களுக்குப் பொறுப்பல்ல என்று கூற முடியாது. இந்த வரலாற்றைப் பார்க்கும் போது எத்தனைக் கட்சிகளுக்கு சர்வதேச தொழிலாளர் தினத்தைக் கொண்டாடத் தார்மிக உரிமை இருக்கிறது என்ற கேள்வி எழுகிறது.

## தொழிலாளர் தினம்:

# அன்றும் இன்றும் ஒன்றா?






யோகேஸ்வரன் ஜோவர்ணன்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.




இந்த உலகம் இன்று வரை சுழன்று கொண்டிருப்பதற்கு பல காரணிகள் இருப்பினும்ரூபவ் அனைத்திற்கும் அடிப்படையாகத் திகழ்வது உழைப்பு எனலாம். உலகம் தோன்றியது முதல் அனைத்து ஜீவராசிகளும் உழைத்துக் கொண்டேயிருக்கின்றன.

மனிதனின் உணவுச் சங்கிலியைப் போல் இன்றியமையாதது, மனித இனத்தின் உழைப்புச் சங்கிலி. பிறப்புக்கு உழைக்கும் மருத்துவர் தொடங்கி இறப்புக்கு உழைக்கும் இடுகாடு வரை, மனித இனத்தின் உழைப்பு ஒருவரை ஒருவர் சார்ந்து, ஒரு சங்கிலித் தொடராய் பின்னிப் பிணைந்து உள்ளது. வீட்டில் இருக்கும் அன்னையின் உழைப்பை அனைவராலும் காணமுடியும்.

சுற்றுவதில் உலகமும் உழைப்பில் அன்னையும் என்றுமே தன்னை நிறுத்திக் கொண்டதில்லை. இவை அனைத்தையும் தாண்டி மே 01, அதாவது தொழிலாளர் தினத்தை அனைவரும் கொண்டாடுவதற்குப் பல தியாகங்கள், போராட்டங்கள், இரத்த சரித்திரங்கள் என பல விடயங்கள் வரலாற்றில் பதிவாகியுள்ளன.

### தொழிலாளர் தினம் ஆரம்பமானது எப்படி?

1880களின் காலகட்டத்தில் உலகம் முழுவதும் 16 முதல் 18 மணிநேரங்கள் வரை தொழிலாளர்கள் கட்டாயப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். நல்ல உறக்கம், நல்ல உணவு, நல்ல உறைவிடம் என்பதெல்லாம் பணக்கார வர்க்கத்திற்குச் சொந்தமானதாக மட்டுமே இருந்தன.

இதை எதிர்த்து தொழிற்புரட்சி ஏற்பட்ட நாடுகளில் போராட்டங்கள் வெடித்தன. அதில் முக்கியமானது மே 3, 4 திகதிகளில், சிக்காகோ நகரில் தொழிலாளர்களின் அமைப்பினர் நடத்திய போராட்டம் மற்றும் பொதுக்கூட்டத்தில் காவல்துறையினர் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதோடு, 7 தொழிலாளர் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

தொடர்ந்து போராட்டங்கள் நடந்து வர 1889 ஜூலை மாதம் 14ஆம் திகதி உலக தொழிலாளர்களின் சர்வதேச கூட்டம் பாரிசில் நடைபெற்றது. இதில் தொழிலாளர் வர்க்கத்தின் கடவுளாகப் பார்க்கப்படும் கார்ல் மார்க்ஸ் மற்றும் பிரெட்ரிக் ஏங்கல்ஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். அதில் கார்ல் மார்க்ஸ் தான் 8 மணி நேர வேலை, 8 மணி நேர உறக்கம், 8 மணி நேர ஓய்வு என்ற கோஷத்தை முன்வைத்து போராட்டங்களை முன்னெடுக்கவும், மே 1ஆம் திகதியை உலக தொழிலாளர் தினமாகக் கொண்டாடவும் அறைகூவல் விடுத்தார்.

அதிலிருந்துதான், "மே தினம்" இந்த திகதியில் கொண்டாடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நாடுகளும் படிப்படியாக இந்த திகதியையே தொழிலாளர் தினமாகக் கொண்டாடவும் ஆரம்பித்தனர்.

### எப்போது இலங்கையில் ஆரம்பமானது?

இலங்கையில் ஆரம்பக் காலத்தில் மேலைத்தேய நாடுகளின் ஆதிக்கத்தினால் முதலாளித்துவக் கோட்பாடுகள் அதிகம் பின்பற்றப்பட்டாலும், தொழிலாளர் வர்க்கத்திற்குச் சார்பான நிகழ்வுகள் பல நிகழ்ந்துள்ளன. இலங்கையின் முதலாவது மே தின ஊர்வலம், 1927ஆம் ஆண்டு தொழிற் சங்கத் தலைவரான A.E.குணசிங்க தலைமையில் நடைபெற்றது.

இதில் ஆண்கள் மற்றும் பெண்கள் அதிகம் கலந்து கொண்டனர். மேள தாள நடனத்துடன் தற்போதைய Price Park Kjy; Galle Face Green மைதானம் வரை நடைபெற்றதாகச் சித்தரிக்கப்படுகின்றது. இதுவே 1956ஆம் ஆண்டு S.W.R.D. பண்டாரநாயக்க பிரதமர் காலத்தில் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டது.

1891ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் திகதி பிறந்த A.E.குணசிங்க, தொழிலாளர் வர்க்கத்திற்கு பாரிய சேவை செய்ததுள்ளார். இவரின் காலப்பகுதியிலேயே புகையிரத வேலைநிறுத்தம் மற்றும் துறைமுக வேலைநிறுத்தம் போன்ற வேலைநிறுத்தங்கள் நிகழ்ந்தன. அநேக வேலை நிறுத்தங்கள் தோல்வியில் முடிந்தாலும் ஆங்கிலேயருக்கு எதிராக முக்கியமான சில வேலை நிறுத்தங்களை வென்றுள்ளார் என்பதோடு, இவரே இலங்கையின் தொழிலாளர் இயக்கங்களின் தந்தையாக அறியப்படுகிறார்.

### இலங்கையில் தொழிலாளர் தொடர்பான சட்டங்கள்?

தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில், இலங்கையில் பல சட்டங்கள் காணப்படுகின்றன. 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் (Employees' Provident Fund Act), 1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம் (Employees' Trust Fund Act), 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டம் (Payment of Gratuity Act), 1950ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க தொழிற் பிணக்குச் சட்டம் (Industrial Dispute Act), 1971ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிலாளர் பணி முடிவுறுத்தற் சட்டம் (Termination of Employment of Workmen Act) என்பன முக்கியமான சில சட்டங்களாகும். ஒரு தொழிலாளி தனக்கு இழைக்கப்படும் தீங்கு தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கும், தீர்ப்பினைப் பெறுவதற்கும் தொழில் நியாய சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

> **உலகம் முழுவதும் 16 முதல் 18 மணிநேரங்கள் வரை தொழிலாளர்கள் கட்டாயப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். நல்ல உறக்கம், நல்ல உணவு, நல்ல உறைவிடம் என்பதெல்லாம் பணக்கார வர்க்கத்திற்குச் சொந்தமானதாக மட்டுமே இருந்தன**

### அனைத்து நாடுகளும் கொண்டாடுகின்றனவா?

பெரும்பாலான நாடுகள் தொழிலாளர் தினத்தை மே 1 அன்று கொண்டாடுகின்றன. பிரேசில், பல்கேரியா, கேமரூன், சிலி, கொலம்பியா, சீனா, கியூபா, சைப்ரஸ், செக் குடியரசு, கொங்கோ ஜனநாயகக் குடியரசு, டென்மார்க், டொமினிக் குடியரசு, ரூடவ்க்வடார், எல் சல்வடா, எகிப்து, பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கிரீஸ், கௌதமாலா, ஹைட்டி, ஹோண்ட்ஸ், ஹாங்காங், ஹங்கேரி, ஐஸ்லாந்து, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, மெசடோனியா, மடகாஸ்கர், மலேசியா, மால்டா, மொரூயஸ், மெக்சிகோ, மொராக்கோ, மியான்மர் வடகொரியா, நோர்வே, பாகிஸ்தான், பனாமா, பராகுவே, பெரு, போலந்து, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், ஸ்லோவகியா, தென்கொரியா, தென்னாப்பிரிக்கா, ஸ்பெயின், செர்பியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் மே 1 தேசிய விடுமுறை தினமாக உள்ளது.

ஆனால், கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் செப்டெம்பர் மாதத்தின் முதற் திங்கட்கிழமையில் கொண்டாடப்படுகின்றது.

### இலங்கையில் தற்போதைய போக்கு?

இலங்கையில் ஆரம்பக் காலத்தில் தொழிலாளர் வர்க்கத்தை மையமாகக் கொண்டே மே தின ஊர்வலங்கள் நடத்தப்பட்டாலும், தற்போதைய காலப்பகுதியில் அரசியல் செல்வாக்கினை காண்பிக்கும் மேடையாகத் தொழிலாளர் தினம் மாற்றம் பெற்றுள் [illegible] வேதனை அளிக்கி [illegible]




"நமக்கான தேசிய உருவாக்கத்தை கட்டியெழுப்பும்

# சூத்திரம் எது?"

## எழுத்தாளரும் ஊடகவியலாளருமான என்.சரவணனுடனான நேர்காணல்



பிரதாப் தியாகராஜா
ஊடகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்



செவ்வாய்க்கிழமை தொடர்ச்சி...

**கேள்வி: மலையகத்திற்கு வெளியிலுள்ள மக்கள் மலையக தமிழர் என்ற இன அடையாளத்தில் கொண்டு வருவது பொருத்தமானதாக இருக்குமா?**

பதில்: மலையகத்திற்கு அப்பால் உள்ள மக்கள் தங்களை வேறு வழியில்லாமல் இலங்கை வம்சாவளியாக்கப் பதிந்து கலந்து விட்டனர். அதிலும் சில பேர் சிங்களவர்களாக மாறிவிட்டனர்.

உதாரணமாக என்னுடைய அம்மாவினுடைய ஊரான களுத்துறையில் தமிழ் பாடசாலை இல்லை, தமிழ் கோயில் இல்லை தமிழ்ப் பண்பாட்டைப் பேணுவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு இல்லை. மலையகத்துடனான ஒரு தொடர்பைப் பேணுவதற்கான வழிமுறைகளைச் செய்ய மலையக தலைமையில் உள்ள அரசியல் கட்சிகளோ சமூக இயக்கங்களோ எதுவுமே செய்யவும் இல்லை. இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு காலப்போக்கில் இவர்கள் தங்களுக்கு எது ஏதுவாக உள்ளதோ அந்த சூழலை எடுத்துக்கொண்டு சிங்களவர்களுடன் சேர்ந்து சிங்களவர்களாக மாறி சிங்களம் பேசிக்கொண்டு திருமண உறவுகள் வைத்துக்கொண்டு சிங்களவர்களாக மாறிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இது களுத்துறையில் மட்டுமல்ல எனக்குத் தெரிந்த பல இடங்களில் இந்த உதாரணத்தை சொல்லலாம்.

**கேள்வி: மலையகத் தமிழர் என்ற இன அடையாளத்தை ஏற்பதற்கு வெளியிலுள்ள இந்திய வம்சாவளியினர் ஆர்வம் காட்டாமைக்கான காரணம் என்ன?**

பதில்: மலையகத்துக்கு வெளியில் உள்ள மக்களைப் பற்றி ஒருவரும் இன்று கதைப்பதில்லை. கொழும்பில் வாழ்கின்றவர்கள் வசதியானவர்கள் என நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள் ஆனால் அப்படி அல்ல. கொழும்பில் தான் மிகப்பெரிய சேரிகள் உண்டு.

அந்த சேரிகளில் வாழும் மக்கள் நம் மக்கள். பெருவாரியான மக்கள் உழைக்கும் தொழிலாளர்களாக இருக்கின்றனர். மலையக தோட்டங்களில் இருக்கும் வசதிகள் கூட சில இடங்களில் இல்லை. இருப்பினும் வசதியானவர்கள், வர்த்தகர்கள், இந்தியாவுடன் தொடர்புபட்ட வர்த்தகர்கள், உயர் சாதியைச் சேர்ந்தவர்கள், பணக்காரர்கள் என்று கூறக்கூடிய மக்களும் மிகச் சிறிய அளவில் இருக்கின்றனர். அவர்களுடைய விருப்பம் வேறு. ஆனால், நாம் அவர்களோடு சேர்த்து இந்த பாவப்பட்ட மக்களையும் வசதியானவர்கள் என்று தனிமைப்படுத்துவது மிகப் பெரிய கொடுமை. இவ்வாறு நாம் செய்வது ஒரு மிகப்பெரிய அநீதி. இதனைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று தான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் கூறுவது என்னவென்றால் மலையகத்துக்கு வெளியில் வாழும் யாரும் மலையக அடையாளத்தைப் பேணுவதை மறுக்கவில்லை. ஆனால், தங்களுக்கு அந்த அடையாளத்தில் சம்பந்தம் இல்லை என்று அவர்கள் கூறுகின்றார்கள். அதாவது நம்மையும் அவர்களையும் இணைக்க கூடிய ஒரு பொதுவான அடையாளம் வேண்டுமென்றே அவர்கள் கேட்டுக்கொள்கின்றனர். அதேபோல, ஒரு இனத்தினுடைய அடையாளத்தை வலுக்கட்டாயமாக கொண்டு வந்து திணிக்கலாமா? தற்காலத்தில் கொச்சிகடையில் சென்று கேட்டுப்பாருங்கள் நீங்கள் எல்லாம் இனி 'மலையகம்' என்று கூறி பாருங்கள்.

இதனை ஒரு சவாலாகவே இவ்வாதத்தில் ஈடுபடுபவர்களிடம் கேட்டிருக்கிறேன். அதைத் தைரியமாக ஏற்க எவரும் முன்வந்ததில்லை. ஆகவே, இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் மலையகம் என்ற ஒரு அடையாளத்தை மலையகத்துக்குள் சூட்டும் போது அது ஒரு பெரிய சிக்கலாக வருவதில்லை. ஆனால் மலையகத்திற்கு வெளியில் சூட்டும் போது அதை மக்கள் ஏற்றுக் கொள்ளும் ஒரு விஷயமாக இருக்க வேண்டும். மலையகத்திற்கும் எங்களுக்கும் என்ன சம்பந்தம் என்று அவர்கள் கேட்கும் நியாயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**கேள்வி: உங்கள் பார்வையில் எந்த அடையாளத்தை முன்னிறுத்துவது பொருத்தமாக இருக்கும்?**

பதில்: நாம் கூறுவது இன தேசிய அடையாளம், பண்பாட்டு அடையாளத்தையும் ஒழுங்காகத் தரம் பிரித்து வரைவிலக்கணப்படுத்த வேண்டும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான்.

மலையகம் என்பது ஒரு முக்கியமான பண்பாட்டு அடையாளம், அதற்கான நியாயங்கள் உண்டு. மலையகத்துக்கே உரிய காலநிலை, அதை சார்ந்த உணவு, உடை பழக்கவழக்கங்கள், பேச்சு வழக்குகள் கலந்துள்ள கலைச்சொற்கள், அதோடு, ஒட்டிய இலக்கியங்கள், செறிவாகச் சேர்ந்த வாழும் வாய்ப்பைப் பெற்றுள்ளதால், இந்தியாவிலிருந்து கொண்டு வந்த பல்வேறு பண்பாட்டு அம்சங்களைப் பேணக்கூடிய வாய்ப்பை பெற்றமை, இவை அனைத்தையும் உள்ளடக்கித் தான் மலையகம் என்கிற பண்பாட்டு அடையாளம் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது.

அதை நாம் கொண்டாடுவதில் மாறுபட்ட கருத்தில்லை. அதைக் கொண்டாடுவதில் எப்போதும் சிந்திக்கத் தேவையில்லை. அதை நான் எழுதும் போது மிகவும் கவனமாகத் தான் எழுதி வந்திருக்கிறேன். மலையகம் என்று நான் எழுதியது மலையாளத்திற்கு உட்பட்ட மக்கள் பற்றி தான். அதேவேளை, மலையகத்துக்கு வெளியில் உள்ள மக்களையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக அடையாளப்படுத்தும் போது இந்திய வம்சாவளியினர் என்றே குறிப்பிட்டு வந்திருக்கிறேன். "இந்தியா" என்கிற சொல்லைத் தொடர விரும்பாத போதிலும் கூட நம்மை ஒரடையாளத்தின் கீழ் இணைத்து வைத்திருப்பது அரச பதிவுகளில் உள்ள அந்த 'இந்தியத் தமிழர்' தான்.

**கேள்வி : உங்கள் எண்ணத்தில் மலையகம் 200 சார்ந்து நடைபெற்ற நிகழ்வுகள் நோக்கத்தை நிறைவேற்றியதா?**

பதில்: உண்மையிலேயே 1823 என்பது ஒரு பிழையான தகவல் அது சம்பந்தமாக நான் நிறைய எழுதி உள்ளேன். ஆனால், அதை நான் பெரிது படுத்தவில்லை. இத்தகவல் பொய் என்று நாம் பிரசார படுத்த வேண்டும் என்று நான் நினைக்கவில்லை.

ஏனென்றால் நமக்கு அது தேவைப்பட்டது. ஏதோ எங்களுக்கு 200 என்று கூறுவதன் ஊடாக பெரிய அளவில் எங்கள் சமூகத்தைப் பற்றி பொதுவெளியில் பேசுபொருளாக்குவதற்கான வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைக்குமாக இருந்தால் அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வதே பகுத்தறிவு பூர்வமான அணுகுமுறையாக இருக்கும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக மலையகம் 200 என்று சொல்லும் போது உண்மையில் எங்களுடைய அரசியல் கலாச்சார பண்பாட்டுப் பொருளாதார தேவைகளை வலியுறுத்தக்கூடிய சரியான தேசிய நிகழ்ச்சி நிரல்கள் கட்டியெழுப்பபடவில்லை.

**கேள்வி மலையகத்திலிருந்து வன்னிக்கு குடியேறியவர்கள் பற்றிய உங்களது அபிப்பிராயம் என்ன?**

பதில்: வன்னிக்கு வந்தவர்களை மூன்று வகையாகக் கூறலாம். தென்னிலங்கையில் சிங்களவர் வாழும் பகுதியில் ஏற்பட்ட கலவரங்களின் போது பாதுகாப்பு இன்றி தஞ்சம் தேடி வன்னிக்கு வந்து குடியேறியவர்கள் ஒரு வகை. இன்னொன்று ஆங்கிலேயர் காலத்தில் தமிழகத்திலிருந்து குளங்கள் கட்டுவதற்குப் பாதைகள் அமைப்பதற்குப் போன்ற வேலைகளுக்காகக் குடியேற்றப்பட்டவர்கள். இதைவிட வியாபாரத்திற்காக வந்து அவ்வாறே வன்னியில் இருப்பவர்களும் இருக்கின்றனர்.

மூன்றாவதாகப் போராட்ட காலப் பகுதிகளில் அரசு அந்நிலங்களில் குடியேற்றங்களுக்காகச் சிங்களர்களைக் கொண்டு வந்து குடியேற்றி விடுவார்கள் என்பதற்காக நம்மவர்களே குடியேறி விடுவது நல்லது என்று கூறி விடுதலை இயக்கங்கள் மலையகத்தில் இருந்து வன்னிக்கு வரவழைத்து அவர்களுக்கு நிலம் தருவதாக நம்பிக்கை அளித்துக் குடியமர்த்தினர். இது குறிப்பாக எண்பதுகளில் நடைபெற்றது. அந்த நேரத்தில் இந்த வேலையைச் செய்வதற்குப் பல இயக்கங்கள் ஒன்றிணைந்தது. அவ்வாறு ஒன்றிணைந்து செயல்பட்ட ஒரு அமைப்பாக காந்தியம் அமைப்பைக் குறிப்பிட முடியும்.

**கேள்வி : மலையகத்திலுள்ள சிறுதெய்வ வழிபாடுகளை பாதுகாப்பதும் அடையாளப்படுத்துவதும் காலத்தின் தேவையென நீங்கள் நினைக்கின்றீர்களா?**

புதில்: நாம் அங்கிருந்து வரும்போது எதைக் கொண்டு வந்தோம்? நாம் நமது நம்பிக்கைகளைக் கொண்டுவந்தோம். அதிகமாக. ஆகவே நாம் வந்து இருந்த இடங்களில் அந்த நம்பிக்கைகளை, குல சாமிகளைக் காவல் தெய்வங்களாக வைத்துக்கொண்டோம்.

ஆனால் அந்தப் பிரதேசங்கள் நாளடைவில் நகராக்கம் அடைய அடைய மெது மெதுவாக எங்களுடைய சிறு தெய்வ வழிபாடுகள் வற்றிப் போவதை நம் கண் முன்னாடியே பார்க்கக் கூடியதாக உள்ளது. உதாரணமாக கொழும்பில் சேரிகளில் இருக்கும் நம்முடைய சொந்தங்கள் இன்றும் தாம் வாழும் சன நெரிசல் மிக்க குடியிருப்புகளில் தமக்கு என்று சிறு தெய்வ கோயில்களை வைத்து வழிபட்டு வந்தனர்.

அவ்வாறு முனியாண்டி, மாடசாமி, கருப்புசாமி, ஐயனார் போன்ற தெய்வங்கள் இருந்த கோயில்கள் எல்லாம் இன்று மெதுவாக அம்மனாக அல்லது வேறு பெரிய தெய்வங்களுக்குப் பிரதான இடத்தை கொடுத்து கோயில்கள், ரதத் திருவிழாக்கள், வழிபாடு, விரதம் என்ற அளவிற்கு எல்லாம் மாறி விட்டது. சிறுதெய்வ மரபு காணாமல் ஆக்கப்பட்டுவிட்டது.

உயர் சாதி பண்பாடுகளில் கவர்ச்சி கொண்டு அந்த சடங்குகளையும் பழக்க வழக்கங்களையும் கொண்டுவந்து எங்களுடைய சடங்குகள் பழக்க வழக்கங்களை ஒதுக்கிவிட்டு. அவர்களின் தெய்வங்களுக்கு வழங்கப்படும் வழிபாட்டினை எங்களது தெய்வங்களுக்குச் செலுத்தி திருவிழாக்கள் கொண்டாட்டங்கள் போன்றவற்றைப் புதிதாக ஆரம்பித்துள்ளனர்.

எமது வழிபாடுகளில் தீட்டுக்கள் சரியான குறைவு. ஆனால், பெரிய தெய்வங்கள் எல்லாம் கொண்டு வந்ததன் பிறகு கட்டுப்பாடுகள் அதிகரித்து விட்டன. சாதியும் உள்நுழைந்து விட்டன.

நம் மக்களும் சாதி ரீதியில் தரம் பிரித்து அடையாளங்களாக ஆக்கப்பட்டு பாரபட்சங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. மலையகத்திலும் இந்த நிலையைக் காணலாம். (முற்றும்)



# உழைப்பினை உரமாக்கி உலகத்தை இயக்கும் தொழிலாளர்கள்




பெரியசாமிப்பிள்ளை
செல்வராஜ்
முன்னாள்
ராஜதந்திரி/தூதுவர்


உலகத் தொழிலாளர்கள் தினமானது ஒவ்வொரு வருடமும் மே மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது.

நெற்றி வியர்வையினை நிலத்தில் சிந்தி, உழைப்பையே தமது மூலதனமாகக் கொண்டு, தாம் வாழும் தேசத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்கின்ற தொழிலாளர்களின் உன்னத தன்மையினை உலகிற்கு அறிமுகப்படுத்திய இதே தினத்தில் தான் அவர்களது அடிமைச் சங்கிலி உடைத்தெறியப்பட்டது.

உழைப்பாளர்களைக் கௌரவிக்கும் முகமாகக் கொண்டாடப்படும் இந்த நாள் உலகிலுள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் உரிய முக்கியமான நாளாகும்.

உழைப்பாளர்களின் ஒற்றுமையையும், மன உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்திய இந்த நாளில் தான், உழைக்கும் தொழிலாளர்களுக்கு எட்டு மணி நேர வேலை, ஊழியத்திற்கேற்ற ஊதியம் முதலானவற்றை சட்டப்பூர்வமாக உலக அரங்கில் அங்கீகாரம் செய்யப்பட்டது.

1886ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியன்று சிகாகோ நகரில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒன்று கூடி எட்டு மணி நேரம் வேலை கேட்டு நடத்திய மகத்தான வேலை நிறுத்தப் போராட்டத்தின் அடையாளமே இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கின்ற மே தினமாகும்.

உலகின் பல்வேறு நாடுகளால் இத் தினம் வெவ்வேறு பெயர்களால், வெவ்வேறு தினங்களில் கொண்டாடப்படுகின்றது.

அநேகமான நாடுகளில் இந்த தினம் உத்தியோகப்பூர்வமான விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளமை இதனது சிறப்பம்சமாகும்.

உழைப்பாளர்கள் ஒன்று சேர்வதற்கும், அவர்கள் தங்களது உரிமைகளைத் தட்டிக் கேட்பதற்கும் உறுதுணையாக நின்றவர் தான், பொதுவுடமைக் கொள்கையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவரும்,

'மூலதனம்' (The Capital) என்ற பிரசித்தமான நூலை இயற்றியவரும், ஜேர்மன் நாட்டுத் தத்துவஞானியுமான 'கார்ல் மார்க்ஸ்', என்பவர் ஆவார்.

'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள். நீங்கள் இழப்பதற்கு எதுவுமில்லை. அடிமைச் சங்கிலிகளைத் தவிர, ஆனால், பெறுவதற்கோ பொன்னான ஒரு உலகம் காத்திருக்கின்றது' என்ற உன்னதமான கோஷத்தினை எழுப்பி, அனைத்து தொழிலாள வர்க்கத்தினரையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்தவர் ஆவார்.

1867ஆம் ஆண்டு வெளியான 'மூலதனம்' என்னும் நூலில் 'வேலை நாள் குறித்து' என்ற தலைப்பின் கீழ் குறிப்பிடும் பொழுது, "வேலை நாளுக்கு சட்டப்பூர்வமான அளவு முதலாவது தேவையாகும். இது இல்லாமல் தொழிலாளி வர்க்கம் முன்னேற்றம் மற்றும் விடுதலைக்கு எடுக்கப்படும் எந்த முயற்சியும் முழுமையாக இருக்காது. வேலை நாளுக்கான சட்டப்பூர்வ அளவு எட்டு மணி நேரமாக இருக்க வேண்டும்" என்று குறிப்பிடுகின்றார்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அந்த நாட்டிலுள்ள உழைக்கும் வர்க்கத்தினரின் அர்ப்பணிப்பும், தியாகச் சிந்தையும் இன்றியமையாதது.

உழைப்பாளர் வர்க்கம் என்றொன்று இல்லாமலிருந்திருந்தால் இந்த உலகம் இன்று நிலை தடுமாறிப் போயிருந்திருக்கும்.

உடலினை இயந்திரமாக்கி, உழைப்பினை உரமாக்கி, உலகத்தை இயங்க வைக்கும் தொழிலாளர்களின் கைகளில் தான் இவ்வுலகம் தங்கியுள்ளது.

அவ்வாறான தொழிலாள வர்க்கம் உலகிற்கு ஆற்றுகின்ற பங்களிப்பினை நினைவு கூறும் முகமாக இத் தினம் கொண்டாடப்படுகின்றது.

உழைப்பாளர்கள் மக்களுடைய நாளாந்த செயற்பாடுகளில் பின்னிப் பிணைந்து காணப்படுவதனால் அவர்களது பங்களிப்பினை நினைவு கூறுதல் அவசியமாகும்.

எமது நாட்டில் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், உழைக்கும் வர்க்கத்தினருக்காகவும் குரல் கொடுத்த "தொழிலாளர் இயக்கத்தின் தந்தை" எனக் கருதப்படுகின்ற அலெக்ஸாண்டர் ஏக்கநாயக்க குணசிங்கவை இத்தினத்தில் நினைவு கூறுவது அவசியமாகும்.

இலங்கையினது தொழிற்சங்க வரலாற்றில் அவரது பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இன்று நடக்கும் மே தின விழாவில் பங்கேற்கும் பல்வேறு அரசியல் கட்சிகளும் , தொழிற்சங்கங்களும், தங்களது கோஷங்களை வழமை போல முன் வைத்தாலும் கூட , இந்த வருடம் இக்கட்சிகள் வரவிருக்கின்ற தேர்தல்களைக் கருத்திற் கொண்டு, தத்தமது வாக்கு வங்கிகளை எவ்வாறு அதிகரித்துக் கொள்ள முடியும் என்பதில் அக்கறை செலுத்துமென்று எண்ண இடமுண்டு.

மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்களில் அங்கம் வகிக்கின்ற பெருந்தோட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் , தாம் சார்ந்த மக்களின் வேதன உயர்வு சம்பந்தமாக பல்வேறுபட்ட காலங்களில் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்திருந்தாலும் கூட , இன்றும் அந்த மக்களது வேதன உயர்வு அதிகரிக்கப்படாதது கவலைக்குரிய விடயமாகும்.

இவர்களது சம்பள உயர்வு அவர்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு உயர்த்தப்படுமா அல்லது அது கானல் நீராகவே காட்சி அளிக்குமா என்பதனைக் கூட காலம் தான் தீர்மானிக்கும்.

தொழிலாளர்களின் வேதனம் சம்பந்தமாகக் கதைத்துக் கொண்டிருந்த பொழுது எனது நண்பர் ஒருவர் கூறிய கவிதை எனது உள்ளத்தை நெருடிச் சென்றது.

"நட்ட மரமெல்லாம் வளர்ந்து விட்டன, நடும் போது குனிந்தவன் மட்டும் இன்னும் நிமிரவேயில்லை".

காலத்திற்கேற்ற கவிதையாகவே எனக்குத் தென்படுகின்றது.

அதிகரித்து வருகின்ற வாழ்க்கைச் செலவினை சமாளிக்கக் கூடிய வகையில் வருமானம் இல்லாத ஒரு நிலையிலேயே இன்றைய தொழிலாள வர்க்கம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இதனால் பல குடும்பங்கள் தமது உணவு நுகர்வினைக் கூட குறைக்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம் அவர்கள் தங்களது குழந்தைகளுக்குப் படிப்பு , மருத்துவம், மற்றும் வேறு தேவைகளுக்குப் பணத்தினை ஒதுக்க வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கின்றனர்.

இதனால் பல்வேறு கட்சிகளும் அதிகரித்து வருகின்ற வாழ்க்கைச் செலவினைக் கண்டித்தும், மிக உயர்ந்த அளவில் காணப்படுகின்ற பொருட்கள் சேவைகளின் மீதான வரியமைப்பினை கண்டித்தும், மக்களது வருமானத்தை அதிகரிக்கக் கோரியும் தமது கோஷங்களை முன் வைக்கலாம் எனக் கருத முடியும்.

சர்வதேச நாணய நிதியத்தினது அதிகளவான நிபந்தனைகளைக் கண்டித்தும் அறிக்கைகளை விடச் சாத்தியமுண்டு.

மாறாக, இந்த அரசியல் கட்சிகள் எவ்வாறு வாழ்க்கைச் செலவைக் குறைக்க முடியும்? மக்களது வேதனத்தை எவ்வாறு அதிகரிக்க முடியும் ? எமது ஏற்றுமதி பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்த முடியும்? அந்நிய செலாவணியை எவ்வாறு அதிகரிக்க முடியும் ? போன்ற பல்வேறுபட்ட விடயங்களுக்கு ஒரு தீர்வினை தத்தமது கூட்டங்களுக்கு வருகின்ற மக்களுக்குத் தெளிவுபடுத்தினால் , அது மக்கள் மனங்களில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்துவதோடு, அவர்களது சிந்தனையில் ஒரு நேர்மறைத் தன்மையினை ஏற்படுத்துவதாக அமையுமெனக் கருத நியாயமுண்டு.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் இன்று ஒரு பதற்றமான சூழ்நிலைக்கு வித்தாக இருக்கின்ற இஸ்ரேலிய - பாலஸ்தீன யுத்தத்தினால் பாலஸ்தீன தேசத்தைச் சேர்ந்த தொழிலாள வர்க்கம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, இவர்களுக்கு ஆதரவு தெரிவித்துக் கூட கோஷங்கள் முன்வைக்கப் படுமெனக் கருதலாம்.

இவ்வாறான பல்வேறுபட்ட சிந்தனைக் கண்ணோட்டத்தில் கொண்டாடப்படுகின்ற உழைப்பாளர் தினமானது உழைக்கும் வர்க்கத்தினது அபிலாசைகளை வென்றெடுக்குமானால் அது பாராட்டப்படக் கூடியது. கோஷங்கள், அறிக்கைகள் என்பன வெறுமனே வாய்ச்சொல்லில் மாத்திரம் இல்லாமல், அது செயற்பாட்டு உருவில் வரும் பொழுது தான் மக்களது மனதிலும் அது நீடித்து நிலைத்திருக்கும்.

உழைப்பாளர் தினம் தொடர்பாக பல கவிஞர்கள் காலத்தால் அழியாத பல பாடல்களை உலகிற்கு வெளிப்படுத்தியிருந்தனர்.

தங்களது உழைப்பை வியர்வையாகச் சிந்தி, மானிட வர்க்கத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் அனைத்து உழைப்பாளர் வர்க்கத்தினருக்கும், எமது மனமார்ந்த மே தின வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.



# "உரிமையை வென்றெடுக்க ஒன்றுபடுவோம்"




நிதர்ஷனா செல்லதுரை
மதுபானம் மற்றும்
போதைப்பொருள்
தகவல் நிலையம்


மக்கள் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தில் அவர்கள் சந்தோஷமாக வாழ்வதற்கு உரிமையுண்டு! மதுபான நிறுவனங்களிடமிருந்து எமது மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்கு ஒன்றுகூடுவோம்.

மதுபான பாவனையானது பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கான அடிப்படை காரணியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் அபிவிருத்திக்குப் பிரதான தடையாகவும் நிலையான அபிவிருத்தி இலக்குகள் 13இனை அடைவதற்குப் பிரதான தடையாகவும் சர்வதேச ரீதியாக மதுபான பாவனையானது அடையாளப்படுத்தப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

மதுபான பாவனையினால் எமது நாட்டில் சுமார் 15,000 பேர் வருடாந்தம் அகால மரணமடைகின்றனர் இவ்வாறு மரணிப்பவர்களில் அதிகமானோர் தந்தையர்களாகவும், குடும்ப தலைவர்களாகவும் காணப்படுவதால் அதிகமான பிள்ளைகளும், பெண்களும் அனாதரவான இக்கட்டான நிலைமைக்கு ஆளாகின்றனர். அத்தோடு தினமும் 60 கோடி எனும் பெருந்தொகை மதுபானத்துக்காக எமது நாட்டு மக்கள் செலவிடுகின்றமைக் குறிப்பிடத்தக்கது,

இதில் அதிகமான மதுபான நிறுவனங்கள் வல்லரசு நாடுகளுக்குச் சொந்தமானவை என்பதால் எமது மக்களின் பணம் வெளிநாடுகளால் சூறையாடப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இது போன்ற பல்வேறு சுகாதார, பொருளாதார, சமூக நெருக்கடிகளை மதுபான பாவனை எமது நாட்டிற்கு ஏற்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

மதுபான பாவனையால் பெருந்தோட்டப்பகுதிகளில் ஏற்படும் பிரச்சினைகள்!

* தோட்டத்தின் ஒரு பிரிவில் மாத்திரம் மாதமொன்றிற்கு சுமார் ரூபாய் 13 இலட்சம் மதுபானத்திற்காகச் செலவிடப்படுகின்றது.

* வருமானத்தின் 2/3 பகுதி மதுபானத்திற்காகச் செலவிடப்படுகின்றது

* சனத்தொகை பரம்பலிற்கு ஏற்ப வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழுகின்ற மக்கள் அதிகமாக வசிக்கின்ற பிரதேசங்களிலேயே அதிகளவான மதுபான சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த 2017 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி நுவரெலியா மாவட்டத்திலேயே அதிகளவான மதுபான சாலைகள் காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

(Source: Trends and patterns of alcohol consumption in Sri Lanka 1981-2017)

* ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் மத்திய மாகாணத்திலேயே மதுபான நுகர்வு மற்றும் பாவனை என்பன அதிகளவு பதிவாகியுள்ளது (Source : Trends and patterns of alcohol consumption in Sri Lanka 1981 - 2017)

* மதுபானத்தை காரணமாக வைத்து ஏற்படுத்துகின்ற பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகளவு பதிவாகியுள்ளன.

* மேலும், சிறுவர்களின் உரிமைகள் அதிகளவு மீறப்படுகின்றன. கல்வி இடை விலகல் சிறு வயதில் வேலைக்கு அமர்த்துதல் போன்ற பிரச்சினைகளுக்கு மதுபானம் காரணமாக அமைகின்றது.

* அதிகளவான வருமானத்தை மதுபானத்திற்காக செலவிடுவதால், பிள்ளைகளுக்கும், பெண்களுக்குமான தேவையான போசாக்கான உணவு மற்றும் சுகாதாரமான வாழ்க்கை முறை ஆகியன ஆகியன தடைப்படுகின்றன.

* விட்டிலுள்ளவர்களின் மதுபான பாவனையின் காரணமாக ஏற்படும் வன்முறைகளால் பெண்களும், சிறுவர்களும் உடல், உள ரீதியான பாதிப்புக்களுக்கு ஆளாகின்றனர். (ஆண்களின் மதுபான பாவனையின் காரணமாக, 80 வீதமான பெண்கள்; பல்வேறு உடல், உள, பொருளாதார அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர் : Source: Report of - u owalcohol use contributes to problems faced by wmen in the estate sector: 2023)

* இளைஞர்கள் மதுபான பாவனைக்கு ஆளாகுவதால் பெருந்தோட்டங்களில் வசிக்கும் எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கையும் கேள்விக்குறியாகின்றன.

* மதுசாரத்திற்காக பாரியளவு பணத்தை வீணாகச் செலவிடுவதால்,அன்றாட தேவைகளையும், வீட்டின் கட்டமைப்பு வசதிகளையும் சரியான முறையில் மேற்கொள்ள முடியாமல் பல இன்னல்களுக்கு மக்கள் முகங்கொடுக்கின்றனர்.

ஆகவே, இவ்வாறான நிலைமையை மாற்றுவதற்கான குரல் அனைவர் மத்தியிலும், அனைத்து மட்டங்களிலிருந்தும் வெளி வர வேண்டும். குறிப்பாக உழைப்பாளர் தினத்தில் அனைவரும் உரிமைகள் தொடர்பாக பல்வேறு கருத்துக்களையும், முன்மொழிவுகளையும் முன்வைப்பார்கள், மேலும் இத்தினத்தை மையமாக வைத்து சில வாக்குறுதிகளும் மக்களின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்படும்.

அத்துடன், பொது மக்களின் அபிவிருத்திக்குத் தடையாக அமைந்துள்ள மதுபான பிரச்சினையைக் குறைப்பதன் மூலம் மக்களின் சுகவாழ்வை மேம்படுத்துவதற்காகவும் அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் எனவும் மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் கேட்டுக்கொள்கின்றது.











### தமிழர் பாரம்பரியத்தை மறக்காமல்

# சிட்னியில் களைகட்டிய சித்திரைத் திருநாள்

காரைதீவு–அவுஸ்திரேலியா மக்கள் ஒன்றியம் தமிழர் பாரம்பரியத்தை மறக்காமல் (AusKar) நடத்திய சித்திரைத் திருநாள் பெருவிழா, சிட்னி லிட்டன் ஸ்ட்ரீட் பார்க் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (28) சிறப்பாக நடைபெற்றது.

ஒஸ்கார் அமைப்பின் நடப்பாண்டுத் தலைவர் கந்தசாமி பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், அதிதிகளாக ஒஸ்கார் அமைப்பின் போசகர்களான சிட்னியில் சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச்சிலை நிறுவிய உதயசூரியன் நாகமணி குணரெட்ணம், முன்னாள் பட்டய கணக்காளர் ரி.பிரகதீஸ்வரன், முன்னாள் பொறியியலாளர் எஸ்.சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்த நிகழ்வில், அவுஸ்திரேலியாவில் வாழும் காரைதீவு பெருமக்கள் அனைவரும் பங்கு பற்றினார்கள். சுமார் நான்கு மணி நேரமாக ஒரே குதூகலமாக நடைபெற்ற நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்று குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பரிசுகள் வழங்கப்பட்டதாக ஒஸ்கார் செயலாளர் திருச்செல்வம் லாவண்யன் தெரிவித்தார்.

– வி.ரி.சகாதேவராஜா
































சீனா

# ஊழியர்களுக்கு மகிழ்ச்சியாக செய்தி

சீனாவின் மத்திய பகுதியில் அமைந்த ஹெனான் மாகாணத்தில் பாங் டாங் லாய் என்ற பெயரிலான சில்லரை வர்த்தக விற்பனை செய்யும் சூப்பர்மார்க்கெட் செயல்பட்டு வருகிறது.

பல்வேறு இடங்களில் கிளை பரப்பி செயல்பட்டு வரும் இதன் நிறுவனர் யூ டாங் லாய். சமீபத்தில், சீனாவில் சூப்பர்மார்க்கெட் பிரிவை மேம்படுத்தும் நோக்கில் 6 நாள் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. இதில் டாங் லாயும் கலந்து கொண்டார்.



இதன்போது அவர் கருத்துரைக்கையில், வேலையில் இருக்கும் ஒவ்வொரு பணியாளருக்கும் சுதந்திரம் வேண்டும் என நான் விரும்புகிறேன்.

ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியற்ற தருணம் வரும். அப்படி நீங்கள் மகிழ்ச்சியாக இல்லையெனில் வேலைக்கு வரவேண்டாம்.
ஊழியர்கள் தங்களுக்கான ஓய்வு நேரம் எதுவென்று அவர்களே முடிவு செய்து கொள்ள முடியும். அதற்கான சுதந்திரம் அவர்களுக்கு வழங்க வேண்டும்.
வேலைக்கு வெளியே அவர்கள் அனைவருக்கும் போதிய ஓய்வு இருக்க வேண்டும் என்பது யூவின் விருப்பம். இந்த விடுமுறையை எடுக்க கூடாது என நிர்வாகம் மறுக்க முடியாது. மறுப்பது என்பது விதிமீறல் ஆகும் என தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, மகிழ்ச்சியற்ற தருணத்தில் விடுமுறை எடுக்கும் அவருடைய யோசனைக்கு சீனாவில் பலத்த வரவேற்பு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் பிரதமர் கைது?



காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் 34 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் உணவு மற்றும் குடிநீர் பஞ்சம் ஏற்பட்டுள்ளது தொற்று நோய் பாதிப்புகளும் தீவிரமடைந்துள்ளன.

ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் அழிக்கப்போவதாக உக்கிரமான தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல், தனது இலக்கின் இறுதிக்கட்டமாக ரபா நகரை குறிவைத்துள்ளது.

அங்கு தரைவழி தாக்குதலை தொடங்கினால் உயிரிழப்புகள் மிக அதிகமாக இருக்கும். எனவே, உடனடியாக போர் நிறுத்தத்தை கொண்டு வரவேண்டும் என்று உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில், போர்க்குற்றம் தொடர்பாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு மற்றும் இராணுவ அமைச்சர் யோவ் கல்லன்ட் மற்றும் இராணுவ தலைமை தளபதி ஹெர்சி ஹலேவி ஆகியோர் கைது செய்யப்படலாம் என்றும் இதற்கான கைது அறிக்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விரைவில் வெளியிடும் என்றும் தகவல் வெளியாகியிருக்கிறது. கைது அறிக்கை பிறப்பிக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தயாராகி வருவதை அறிந்து இஸேரல் கவலை அடைந்திருப்பதாக 5 இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மிரட்டுகிறது கடும் மழை



மழையே கண்டிராத மத்திய கிழக்கு நாடுகளில் சமீப நாட்களில் கனமழை கொட்டி வருகிறது. சில நாட்களுக்கு முன்பு ஐக்கிய அரபு அமீரகத்தில் கன மழை பெய்த நிலையில், சவூதி அரேபியாவில் பலத்த சூறாவளியுடன் கன மழை பெய்துள்ளது.

புனித நகரான மதினாவில் மழை காரணமாக வீதிகள் துண்டிக்கப்பட்டு கார்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன.

மேலும், ரியாத் உள்ளிட்ட நகரங்களிலும் கடும்மழை பெய்த நிலையில், பாடசாலை மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டு, ஒன்லைன் மூலம் வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

ரியாத் உள்ளிட்ட நகரங்களிலும் கடும்மழை பெய்த நிலையில், பாடசாலை, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டு, ஆன்லைன் மூலம் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கர்நாடகா

# திருமண அழைப்பிதழால் சிக்கிய மணமகன்

இந்தியாவின் வட கர்நாடகாவின் 14 பாராளுமன்ற தொகுதிகளுக்கு மே 7ஆம் திகதி தேர்தல் நடைபெற உள்ளது.

இந்நிலையில், கர்நாடகாவின் தட்சிண கன்னடா மாவட்டத்தில் சமீபத்தில் திருமணம் செய்து கொண்ட மணமகன் ஒருவர், தேர்தல் நன்னடத்தை விதிகளுக்கு எதிராக நடந்து கொண்டார் என சர்ச்சை எழுந்தது.

இதில் பிரதமர் மோடியை மீண்டும் தேர்ந்தெடுப்பதே தம்பதிக்கு நீங்கள் அளிக்கும் சிறந்த பரிசாக இருக்கும் என்ற வரியைத் திருமண அழைப்பிதழில் இடம்பெறச் செய்திருந்தார்.

இதையடுத்து, தேர்தல் ஆணையத்திடம் மணமகன் உறவினர் ஒருவர் புகார் அளித்துள்ளார்.

மணமகனின் வீட்டுக்குத் தேர்தல் ஆணைய அதிகாரிகள் சென்று விசாரித்த போது, தேர்தல் திகதி அறிவிப்புக்கு முன்னரே, மார்ச் 1ஆம் திகதி திருமண வரவேற்பிதழ் அச்சடிக்கப்பட்டது.



அந்த வரியானது பிரதமர் மோடி மற்றும் நாட்டின் மீது கொண்ட அன்பால் சேர்க்கப்பட்டது என மணமகன் விளக்கம் அளித்திருக்கிறார்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கேரளா

# ஓட்டுமர் உரிமம் பெற்ற முதல் ஆசிய பெண்

இந்தியாவின் கேரள மாநிலத்தில் தொடுபுழாவில் பிறந்த ஜிலுமோல் மேரியட் தாமஸ். என்பவர் இரண்டு கைகளும் இல்லாமலே ஓட்டுமர் உரிமம் பெற்ற முதல் ஆசிய பெண்மணி என்ற சாதனையை படைத்துள்ளார்.

ஓட்டுனர் உரிமம் பெற வேண்டி இவர் ஒவ்வொரு முறை விண்ணப்பிக்கும் போதும், இவரது குறைபாடுகளை காரணம் காட்டி போக்குவரத்து அதிகாரிகள் ஜிலுமோலின் விண்ணப்பத்தை நிராகரித்து வந்தனர்.

இதை எதிர்த்து கேரள உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார் ஜிலுமோல்.

இதற்கிடையில் இவர் ஓட்டுவதற்கு வசதியாக உடல் குறைபாடு கொண்டவர்களுக்கான மாநில ஆணையம் மற்றும் கொச்சியில் உள்ள தனியான நிறுவனத்தின் உதவியோடு காரின் அமைப்பை மாற்றி வடிவமைத்தனர். அதன்பிறகு மிகவும் சிரமமான ஓட்டுனர் சோதனையில் பங்கேற்று அதிலும் வெற்றிகரமாக தேர்வாகி 2023ஆம் ஆண்டில் ஓட்டுனர் உரிமத்தையும் பெற்றார். இன்னும் முத்தாய்ப்பாக பாலக்காடில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் கையாலேயே நேரடியாக தனது ஓட்டுனர் உரிமத்தை பெற்றார் ஜிலுமோல்.



ஐ.பி.எல்:

# டெல்லியை வீழ்த்திய கொல்கத்தா

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), கொல்கத்தாவில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற டெல்லி கப்பிட்டல்ஸ் உடனான போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லியின் அணித்தலைவர் றிஷப் பண்ட், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.




அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி, ஆரம்பத்திலிருந்தே வைபவ் அரோரா (2), மிற்செல் ஸ்டார்க், ஹர்ஷித் ரானா (2), வருண் சக்கரவர்த்தி (3), சுனில் நரைனிடம் குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்த நிலையில் குல்தீப் யாதவ்வின் ஆட்டமிழக்காத 35 (26) ஓட்டங்களால் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 154 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா, பில் ஸோல்டின் 68 (33) ஓட்டங்கள் மூலம் வேகமான ஆரம்பத்தைப் பெற்று சுனில் நரைனையும், அவரையும் குறிப்பிட்ட இடைவெளிகளில் இழந்திருந்தது. பின்னர் ரிங்கு சிங்கும் லிஸார்ட் வில்லியம்ஸிடம் வீழ்ந்தபோதும் அணித்தலைவர் ஷ்ரேயாஸ் ஐயரின் ஆட்டமிழக்காத 33 (23), வெங்கடேஷ் ஐயரின் ஆட்டமிழக்காத 26 (23) ஓட்டங்களோடு 16.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக வருண் சக்கரவர்த்தி தெரிவானார்.

இந்நிலையில் சென்னையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பஞ்சாப் கிங்ஸை நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர்கொள்கிறது.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# வலென்சியாவை வென்ற பார்சிலோனா




ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற வலென்சியாவுடனான போட்டியில் 4-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பார்சிலோனா வென்றது.

பார்சிலோனா சார்பாக றொபேர்ட் லெவன்டோஸ்கி மூன்று கோல்களையும், பெர்மின் லொபெஸ் ஒரு கோலையும் பெற்றனர். வலென்சியா சார்பாக ஹியூகோ டுரோ, பெபெலு ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 84 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றியல் மட்றிட் உள்ளது. 73 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் பார்சிலோனாவும், 71 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஜிரோனாவும், 64 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டும் காணப்படுகின்றன.







# கிரிக்கெட் போட்டியில்

வடக்கு மாகாண துறைசார் வல்லுநர்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டு அரங்கில் ஞாயிற்றுக்கிழமை (28) நடைபெற்றது. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து சிறப்பித்தார்.

# அனைவரையும் விற்கும் மன்செஸ்டர் யுனைட்டெட்?

ஏறத்தாழ தமது குழாமின் அனைத்து வீரர்களையும் விற்க இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் தயாராகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

யுனைட்டெட்டின் உரிமையாளரான ஜிம் ரட்கிளிஃப் கழகத்தை கிண்ணங்களுக்கு சவால் விடுக்கும் அணியாக மாற்ற எதிர்பார்க்கையிலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

முன்களவீரரான மார்க்கஸ் றஷ்ஃபோர்ட்டும் இப்பட்டியலில் உள்ளபோதும் அவர் போர்முக்குத் திரும்புவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

தவிர அணித்தலைவர் ப்றூனோ பெர்ணாண்டஸ், கோல் காப்பாளர் அன்ட்ரே ஒனானா, பின்களவீரர் டியகோ டலொட் மற்றும் ஹறி மக்குவாயா, மத்தியகளவீரர் ஸ்கொட் மக்டொமினி ஆகியோருக்கும் பாரிய தொகை கிடைக்கப் பெற்றால் அவர்களையும் விற்க யுனைட்டெட் தயாராகியுள்ளது.

இதேவேளை, முன்களவீரர் அந்தோனி மாஷியல், பின்களவீரர் ரஃபேல் வரான் ஆகியோரின் ஒப்பந்தம் முடிகையில் இவர்கள் விலகுவதோடு, மத்தியகளவீரர் சொஃபயான் அம்ரபட் தனது கழகமான பியொரென்டினாவுக்குத் திரும்புவாரென எதிர்பார்க்கப்படுகிறது.




# செல்சியிலிருந்து விலகும் தியாகோ சில்வா

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியிலிருந்து நடப்பு பருவகால முடிவில் அதன் பின்களவீரரான தியாகோ சில்வா விலகவுள்ளார்.

பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனிலிருந்து கடந்த 2020ஆம் ஆண்டு செல்சியில் இணைந்த 39 வயதான தியாகோ சில்வா, செல்சிக்காக 151 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

செல்சியில் 2020-21 சம்பியன்ஸ் லீக் உட்பட மூன்று கிண்ணங்களை தியாகோ சில்வா வென்றுள்ளார்.

இந்நிலையில், புதிய பதவியில் எதிர்காலத்தில் செல்சிக்குத் திரும்ப எதிர்பார்ப்பதாக தியாகோ சில்வா கூறியுள்ளார்.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 01 மே 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.